
www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

ஏப்ரல் - 2002
ம.க.இ.க மாத இதழ்
ரூ 5.00



தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதிகள்: சலுகையா கொடுமையா?



குஜராத் :
முஸ்லீம் மக்கள்
இனப்படுகொலை

நீ இந்து என்றால் சொல்

## சம்மதமா ?

படிப்பகம்

www.padippakam.com

# ம.க.இ.க-வின் தமிழ் மக்கள் இசைவிழா ஒன்பதாமாண்டு

தமிழைச் சவடாலுக்குரிய மொழியாகவும் பிழைப்பதற்கு ஒரு வழியாகவும் பயன்படுத்தி, மொழியையும் மக்களையும் வந்த விலைக்கு எதிரிகளிடம் விற்றுவிட்ட தமிழ் மண்ணில், இன்னும் எஞ்சியிருக்கிறது போர்க்குணம் என்பதற்கோர் சான்றாக மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் தமிழ் மக்கள் இசை விழா தஞ்சையில் நடைபெற்றது.

பிப்ரவரி-9, 2002 சனிக்கிழமையன்று நடைபெற்ற ஒன்பதாம் ஆண்டு விழாவில் முன்னெப்போதைக் காட்டிலும் அதிகமான மக்கள் வெள்ளம். விழாவுக்குச் சில நாட்கள் முன்னதாக தியாகய்யர் உற்சவத்தில் புகுந்து முழக்கமிட முயன்றதாக நான்கு தோழர்கள் கைது செய்து சிறை வைக்கப்பட்டனர். வழக்கமாக விழாவன்று காலையில் நடைபெறும் கலைப் பேரணிக்குக் காவல் துறை தடை விதித்துவிட்டது. நகரங்களின் முக்கியமான வீதிகளில் ஊர்வலம் நடத்த உச்ச நீதிமன்றம் விதித்திருக்கும் இடைக்காலத் தடையைக் காரணம் காட்டியது.

ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் உச்ச நீதிமன்ற உத்தரவுகளுக்கு உடனே கட்டுப்படும் காவல்துறையின் 'மெச்சத் தக்க ஒழுங்கு', தியாகய்யருக்காக நடத்திய உஞ்ச விருத்தி ஊர்வலத்தை மட்டும் தடுக்கவில்லை. எனவே பேரணிக்கு அனுமதி மறுக்கப்பட்டதால் ''பேரணிகள்'' நடந்தன. நகரத்தின் வெவ்வேறு முனைகளிலிருந்தும் நூற்றுக்கணக்கான தோழர்கள் தடையை மீறி, முழக்கமிட்டபடியே பேரணியாகத் திடலை வந்தடைந்தனர்.

கருத்தரங்கில் தலைமையுரையாற்றிய தோழர் காளியப்பன், பார்ப்பனப் பாசிசக் கும்பலிடம் சரணடைந்துவிட்ட பிழைப்புவாத திராவிட இயக்கங்களைச் சாடினார். கண்ணகி சிலை அகற்றப்பட்ட விவகாரத்தை வைத்துக்கொண்டு 'சாமியாடும்' கருணாநிதி, வை.கோ., ராமதாசு போன்றோர், பாரதீய ஜனதா அரசு அமல்படுத்தி வரும் கல்வி காவிமயம், அயோத்தி கோயில் விவகாரம், சமஸ்கிருத மயமாக்கம் போன்ற அப்பட்டமான பார்ப்பன வெறித்தனங்களுக்குப் பூசாரி வேலை பார்ப்பதை அம்பலப்படுத்தினார்.

தோழர் மருதையன் தனது முதன்மையுரையில் தமிழ் மக்கள் இசைவிழா என்பதை பார்ப்பன இசைக் களவுக்கு எதிராக நடத்தப்படும் போராட்டம் என்று மட்டும் புரிந்து கொள்ளக் கூடாது என்பதை வலியுறுத்தினார். தமது இசை விழாவை அரசியல் சார்பற்ற நிகழ்ச்சி போல தியாகய்யர் கும்பல் காட்டிக் கொண்டாலும் அவர்கள் பிரச்சாரம் செய்யும் உள்ளடக்கமும், அவ்விழாவுக்கு வருகை தரும் அமைச்சர்களும் நீதிபதிகளும், அதன் புரவலர்களாக இருக்கும் அரசும் பன்னாட்டு நிறுவனங்களும் அது எதிரி முகாம் என்பதை நிரூபிக்கின்றன என்றார்.

'தொலைக்காட்சியும் தமிழர் பண்பாடும்' என்ற தலைப்பில் பேசிய பேராசிரியர் ஷாஜகான் கனி, தொலைக்காட்சிகள் நடத்தும் தமிழ்க் கொலை, தொடர்கள் பரப்பும் பண்பாட்டுச் சீரழிவு, விளம்பரதாரர்கள் வழங்கும் நுகர்பொருள் வெறி ஆகியவற்றை எடுத்துக் காட்டுகளுடன் விளக்கி, ஒவ்வொரு வீட்டிலும் சம்மணமிட்டு அமர்ந்து கொண்டு குடியைக் கெடுக்கும் எதிரி குறித்து மக்களை எச்சரித்தார்.

பேரா. செ.அ. வீரபாண்டியன் செவ்விசையின் மேன்மை குறித்தும், நாட்டுப்புற இசையின் தாழ்ந்த நிலை குறித்தும் பரப்பப்படும் கட்டுக் கதைகளைத் தமது உரையில் தகர்த்தெறிந்தார். ஆன்மீகத்தின் பிடியிலிருந்தும், மேளகர்த்தா முறை என்ற அறிவியலுக்கு விரோதமான முறையிலிருந்தும் மக்கள் விடுதலைக்குப் போராடும் இயக்கங்கள்தான் இசையை விடுவிக்க முடியும் என்பதை நிறுவினார். மேற்கத்திய இசை மரபு தேவாலயத்தின் பிடியிலிருந்து விடுபட்ட பின்னர்தான் சிம்பனி இசை தோன்றி வளர்ந்தது என்பதையும், செவ்வியல் இசை நெருக்கடியில் சிக்கும் போதெல்லாம் அது வாழ்வியல் சார்ந்த நாட்டுப்புற இசையின் துணையுடன்தான் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது என்பதையும் விளக்கினார்.

பீத்தோவனின் சிம்பனி இசைத் துணுக்கு ஒன்றுடன் தமிழ் நாட்டுப்புற இசை மெட்டும் தாளமும் பொருந்துவதை இசைத்துக் காட்டினார். இன வேறுபாடுகள், மரபுகளினடிப்படையில் இசை முறைகள் ஒவ்வொன்றிலும் சில சிறப்புத் தன்மைகள் இருக்கின்ற அதே நேரத்தில், உழைக்கும் மக்களிசை வகைகளில் உள்ள பொதுத்தன்மைகளுக்கு இது சான்று என்று குறிப்பிட்டார்.

ரெட்டிப்பாளையம் பறையிசைக் கலைஞர்கள், நாயனக் கலைஞர் நாகு, ம.க.இ.க. கலைக்குழுவினர், இசையமைப்பாளர் ரமேஷ் ஆகியோர் செயல்முறை விளக்கத்தில் பங்கேற்று இசைத்தனர். நாட்டுப்புற இசையின் சிறப்புக்குச் சான்றாய் பேரா. வீரபாண்டியன்

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்



**பறை குறித்து ஆய்வு செய்யும் ஜப்பானிய ஆய்வாளர், கலை நிகழ்ச்சிகளைத் துவக்கி வைக்கிறார்.**



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• புதிய கலாச்சாரம்

• மக்கள் கலை இலக்கியக்
கழக மாத இதழ்

• போர்: 19
• குரல்: 10,11
• ஏப்ரல் - 2002

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டுச்சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா: US$ 9

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@hotmail.com
தொ.பேசி எண்: 044-3718706

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
15-வது தெரு அருகே,
அசோக் நகர், சென்னை-600 083.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

# மதச்சார்பின்மையின் முகமூடி!

“சங்க பரிவாரத்தின் முகமூடிதான் வாஜ்பாயி” என்று ஒருமுறை சொன்னார் கோவிந்தாசார்யா. உண்மையில் தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க., பெர்னாண்டஸ் போன்ற “மதச்சார்பற்ற” கூட்டாளிகளின் பிழைப்புவாதத்திற்கும், காங்கிரசு முதல் மார்க்சிஸ்டுகள் வரையிலான “மதச்சார்பற்ற” எதிர்க்கட்சிகளின் கோழைத்தனத்திற்கும்தான் திருவாளர் வாஜ்பாயி ஒரு முகமூடியாகப் பயன்பட்டு வருகிறார். சங்க பரிவாரத்திற்கும் மதச்சார்பற்ற கட்சிகளுக்கும் இடையிலிருக்கின்ற நடுநிலையாளராகவும் நல்லவராகவும் வாஜ்பாயியைச் சித்தரிக்கும் மோசடி வேலையை மேற்சொன்ன கட்சிகளுடன் தகவல் ஊடகங்களும் இடைவிடாது செய்து வருகின்றன. தன் உண்மையான முகத்தின் மீது வலுக்கட்டாயமாகப் பசை தடவி ஒட்டப்படும் இந்த 'மதச்சார்பற்ற' முகமூடியைப் பிரதமர் என்ற முறையிலேயே பலதடவை அவர் பிய்த்தெறிந்திருக்கிறார்.

இரண்டாண்டுகளுக்கு முன் கும்பமேளாவில் வி.இ. பரிசத் சாமியார்கள் ராமன் கோயில் கட்டும் திட்டத்தைப் பிரகடனம் செய்தவுடன் “அயோத்தி கோயில் என்பது நிறைவேறாமலிருக்கின்ற தேசியக் கனவு” என்றார். கிறித்தவ தேவாலயங்களும் பாதிரியார்களும் தாக்கப்பட்டபோது “மதமாற்றம் குறித்த தேசிய விவாதம் தேவை” என்றார். பாடத்திட்டங்களில் பார்ப்பனப் புரட்டு நடந்தபோது “வரலாற்றில் தவறு இருந்தால் திருத்த வேண்டியதுதானே” என்றார். பிரதமர் என்ற முறையில் அமெரிக்கா சென்று அங்கே விசுவ இந்து பரிசத்தின் கூட்டத்தில் “நான் ஒரு சுயம் சேவக் என்று கூறிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்” என்றார். பாரதீய ஜனதாவின் தோல்விக்கான சகுனங்கள் தெரியத் தொடங்கவே, “நீங்கள் ஓட்டுப் போடாவிட்டாலும் நாங்கள் வெற்றி பெறுவது உறுதி” என்று முசுலீம் மக்களை உ.பி. தேர்தல் பிரச்சாரத்திலேயே மிரட்டினார். இவை கடந்த இரண்டரை ஆண்டு காலத்தில் நல்லவர் வாஜ்பாயியின் சில நடவடிக்கைகள்.

வி.இ.ப. சாமியார்களின் ஆணைப்படி உச்ச நீதிமன்றம் கையகப்படுத்திய மசூதியைச் சுற்றியுள்ள நிலத்தை மீண்டும் அவர்களிடமே ஒப்படைப்பதற்கான வழிவகைகளை ஆராயுமாறு சட்ட அமைச்சகத்துக்கு உத்தரவிட்டார். இந்த 'ஆராய்ச்சி' நடக்கும்போதே கரசேவகர்கள் அயோத்தியில் குவிய அனுமதித்தார். “தாவாவுக்குரிய இடத்தில் நீதிமன்ற உத்திரவு பேணப்படும்” என்று ஜனாதிபதிக்கு உரை எழுதிக் கொடுத்துவிட்டு, உத்திரவை மீறுவதற்கான கட்டைப் பஞ்சாயத்துக்கு சங்கராச்சாரியை வரவழைத்தார். “மசூதி இருந்த நிலப்பகுதியைச் சுற்றிக் கோயில் கட்டிக் கொள்வது, இறுதித் தீர்ப்பு முசுலீம்களுக்கு ஆதரவாக வரும் பட்சத்தில் தீர்ப்புக்கு விசுவ இந்து பரிசத் கட்டுப்படுவது” என்ற சூழ்ச்சித் திட்டத்தை அரசு ஏற்றுக் கொண்டு விட்டதாக சங்கராச்சாரியை அறிவிக்கச் செய்தார். 'முரண்டு பிடிப்பவர்கள் முசுலீம்கள்தான்' என்ற பொய்த் தோற்றத்தை சங்கராச்சாரியின் மூலம் உருவாக்கினார். வழக்கு விசாரணைக்கு வந்தபோது “மசூதி இருந்த இடத்திலிருந்து 100 மீட்டர் தூரத்தில் தூண் தானம் செய்யலாம்” என்று சோலி சோரப்ஜியைப் பேசவைத்து விட்டு, அது பற்றிக் கேள்வி எழுந்தபோது “அது அட்டார்னி ஜெனரலின் சொந்தக் கருத்து” என நாடகமாடினார். இறுதியில் பிரதமர் அலுவலகத்திலிருந்தே ஒரு அதிகாரியை அனுப்பி தூணைத் தானம் வாங்கி அரசாங்கக் கருவூலத்தில் பூட்டி வைத்து இராமன் கோயில் கட்டுமானப் பணியில் மத்திய அரசையும் சிக்க வைத்திருக்கிறார். இவை அயோத்தி பிரச்சினையில் யோக்கியர் வாஜ்பாயியின் தகிடுதத்தங்கள்.

கோத்ரா ரயில் எரிப்புச் சம்பவத்தைப் பார்த்த மாத்திரத்தில் இது ஐ.எஸ்.ஐ. சதி என்று நரேந்திர மோடி சொன்னதையும், அதை அத்வானி வழிமொழிந்ததையும், குஜராத் முசுலீம் படுகொலையை நியூட்டன் விதியைக் காட்டி மோடி நியாயப்படுத்தியதையும், 72 மணிநேரத்தில் 'சகஜ நிலை' திரும்பிவிட்டது என அத்வானியும் மோடியும் ஒத்துப் பாடியதையும் வாஜ்பாயி மறுக்கவில்லை; விளக்கம் கேட்கவில்லை. “கோத்ரா சம்பவம்தான் பயங்கரவாதம் அதன்பின் நடைபெற்ற முசுலீம் எரிப்பெல்லாம் பயங்கரவாதமல்ல” என்று அத்வானி சொன்னதையும், கோத்ராவுக்காகக் கைது செய்யப்பட்டவர்கள் மீது மட்டும் பொடா சட்டம் பாய்ந்ததையும், பின்னர் தந்திரமாக வாபஸ் பெறப்பட்டதையும் பற்றி வாஜ்பாயி அவர்களிடம் எந்த விளக்கமும் கோரவில்லை. பொடா சட்டம் நிறைவேற்றப்படுவதற்காகக் காத்திருந்தார்.

பின்னர் மோடியை டெல்லிக்கு வரவழைத்தார். மோடிக்கு கசையடியும் கல்தாவும் உறுதி என்பதைப் போல பத்திரிகைகள் எழுதிக் கொண்டிருந்தன. ஆனால் மரபுக்கு விரோதமாக அதிகாரிகளைக் கூட வெளியே அனுப்பிவிட்டு மோடி, அத்வானி ஆகிய சுயம் சேவகர்களுடன் இரகசிய ஆலோசனை நடத்தினார். அதன்பின் குஜராத்

படிப்பகம்

www.padippakam.com




பயணம். படுகொலை பற்றி சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்ற தேசிய மனித உரிமைக் கமிசனின் முடிவு, குஜராத் அரசும் விசுவ இந்து பரிசத்தும் இணைந்து நடத்திய இனப்படுகொலை என்பதற்கான ஆதாரங்கள், மோடியை நீக்கக் கோரும் எதிர்க்கட்சிகளின் கோரிக்கை ஆகிய அனைத்தும் வாஜ்பாயியின் சட்டைப் பையில் இருந்தன. கண்முன்னே பாதிக்கப்பட்ட முசுலீம் மக்கள் ஆயிரக்கணக்கில் இருந்தார்கள். ஆனால் பிரதமரோ முன்னரே தயாரிக்கப்பட்ட வசனத்தை ஒரு நடிகனுக்குரிய தேர்ச்சியுடன் பேசினார். ''சொந்த நாட்டின் அகதிகளாகிவிட்டீர்களே'' என்று முசுலீம்களைப் பார்த்து கண்கலங்கினார் - ஆனால் அவர்களைப் 'பாகிஸ்தானுக்கு ஓடு' என்று கூச்சலிடும் விசுவ இந்து பரிசத்தின் பெயரைக் கூட உச்சரிக்கவில்லை. ''எந்த முகத்துடன் முசுலீம் நாடுகளுக்குச் செல்வேன்'' என்று பக்கத்திலிருந்த கொலைகாரன் மோடியிடம் கோபமாகக் கேட்க வேண்டிய கேள்வியை முசுலீம்களிடம் கேட்டார். நடந்த படுகொலையையே தனக்கு நேர்ந்த அவலமாகச் சித்தரித்து அதையே முசுலீம் மக்களிடம் சொல்லி அனுதாபம் தேடினார்.

வாஜ்பாயி என்ற இந்த முகமூடிக்கு ஒரு சிறப்பம்சம் இருக்கிறது. இரண்டிலொன்றைத் தெளிவாகப் பேசவேண்டிய சந்தர்ப்பங்களில் உணர்ச்சிப் பசப்பலின் மூலம் பிரச்சினையையே திசை திருப்புகின்ற ஆற்றல் வாஜ்பாயி என்ற இந்த முகமூடிக்கு இருக்கிறது. ''நீங்கள் அரசியல் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவரா, சங்க பரிவாரத்துக்குக் கட்டுப்பட்டவரா என முடிவு செய்ய வேண்டிய தருணம் வந்துவிட்டது'' என்று பாராளுமன்றத்தில் சோனியா எழுப்பிய கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்வதைத் தவிர்த்து அதைத் தன்மீது தொடுக்கப்பட்ட தனிப்பட்ட தாக்குதலென்று திசை திருப்பினார் வாஜ்பாயி. ''மரணத்தைக் கூடச் சந்திப்பேன் - களங்கத்தைச் சுமக்க மாட்டேன்'' என்று சீறினார்; கற்பின் பெருமை குறித்து தமிழ் சினிமாக் கதாநாயகி பேசும் கிளைமாக்ஸ் வசனத்தைப் போன்ற சரக்கை அவிழ்த்து விட்டு கேள்வியையே வெற்றிகரமாகத் திசை திருப்பினார். இதே பசப்பல்தான் குஜராத்திலும் நடந்திருக்கிறது. நான் மோடியல்ல என்று முசுலீம்களிடம் தெரிவித்திருக்கிறது இந்த முகமூடி.

தேசிய ஜனநாயக முன்னணியில் அங்கம் வகிக்கும் மதச்சார்பற்ற கூட்டாளிகளின் நிர்ப்பந்தம் காரணமாக வாஜ்பாயி சுதந்திரமாக இயங்க முடியவில்லை என்றும், தங்கள் இந்துத்துவக் கொள்கைகள் எதையும் அமல்படுத்த முடியவில்லையென்றும் போலியாக அங்கலாய்த்துக் கொள்கிறது ஆர்.எஸ்.எஸ். கும்பல். இந்தப் போலியான அங்கலாய்ப்பையே தங்களது கொள்கை உறுதிக்குச் சான்றாகக் காட்டி ஏய்க்கிறார்கள் கூட்டணிப் பிழைப்புவாதிகள். முகமூடி கழன்று விழும் தருணங்களில் இவர்களே முந்திக் கொண்டு முட்டுக் கொடுக்கிறார்கள். ''சங்கராச்சாரி பஞ்சாயத்தில் தவறில்லை'' என்கிறார் கருணாநிதி; ''தூண்தானம் தவறில்லை'' என்கிறார் பஸ்வான்; ''குஜராத்தில் கலவரமில்லை'' என்கிறார் பெர்னாண்டஸ். முகமூடி பேசவேண்டியப வசனங்களைத் தாங்களே பேசி முகமூடியின் கற்பை இவர்கள் காப்பாற்றுகிறார்கள்.

ஆர்.எஸ்.எஸ்.ஸின் நிர்ப்பந்தம் காரணமாக வாஜ்பாயி சுதந்திரமாக இயங்க முடியவில்லை என்று அனுதாபப்படுகிறார்கள் எதிர்க் கட்சிகள். ''மார்ச் மாதத்திற்குள் அயோத்தி பிரச்சினை தீர்ந்துவிடும் என்று வாஜ்பாயி நம்பிக் கொண்டிருந்தார்... நாம் வேறு அவருக்குஇன்னும் பிரச்சினைகளை உருவாக்க வேண்டாம் என்று எண்ணி எதிர்க்கட்சிகளாகிய நாங்களும் அவருக்கு நிர்பந்தம் கொடுக்கவில்லை'' என்கிறார் மார்க்சிஸ்டு தலைவர் சோம்நாத் சாட்டர்ஜி (டைம்ஸ் ஆப் இந்தியா, 5.3.2002)

நிர்ப்பந்தம் கொடுத்தால் முகமூடி கிழியும். சங்க பரிவாரத்தின் ஆட்சி என்ற உண்மை வெளிப்பட்டால் அதைச் சந்திக்கத் தெருவில் இறங்க வேண்டியிருக்கும். பாராளுமன்ற அரட்டை மண்டபத்தில் அமர்ந்து ''மோடியை நீக்குங்கள்'' ''ஆர்.எஸ்.எஸ்.ஸைக் கட்டுப்படுத்துங்கள்'' என்று நிறைவேறாத கோரிக்கைகளை நிறைவேற்ற விருப்பமில்லாத நபரிடம் வைத்து எதிர்க்கட்சிகள் நடத்திக் கொண்டிருக்கும் நாடகம் முடிந்து அவர்களது கோழைத்தனம் அம்பலத்திற்கு வரும். கூட்டணிக் கட்சிக்காரர்களுக்கோ அவர்களது மந்திரிப் பதவியும் பிழைப்புவாதமும் வாஜ்பாயி என்ற முகமூடி கழன்ற மறுகணமே முடிவுக்கு வந்துவிடும்.

ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகத் தயாரிக்கப்பட்ட மதவெறியின் முகமூடி இப்போது 'மதச்சார்பின்மையின்' முகமூடியாகிவிட்டது.

**கூட்டணிக் கட்சிகளின் நிர்ப்பந்தம் காரணமாக வாஜ்பாய் சுதந்திரமாக இயங்க முடியவில்லை என்று அங்கலாய்க்கிறது ஆர்.எஸ்.எஸ்.**

**ஆர்.எஸ்.எஸ்-இன் நிர்ப்பந்தம் காரணமாக வாஜ்பாயி சுதந்திரமாக இயங்க முடியவில்லை என்று அனுதாபப்படுகிறார்கள் எதிர்க்கட்சியினர்.**


படிப்பகம்

www.padippakam.com



குஜராத் இனப்படுகொலை

# இசுலாமிய தீவிரவாதத்திற்கு பாரதீய ஜனதாவின் அழைப்பு!

அந்தக் குழந்தை தலையைக் கவிழ்த்து நடுங்கிய்படி உட்கார்ந்திருந்தது. திடீர் திடீரென விசும்பியது. அதற்கு 5 வயது இருக்கும். கிழிந்து போன மஞ்சள் சட்டையில் திட்டுத் திட்டாகக் கறை. சட்டையை விலக்கி அவளுடைய முதுகைக் காட்டினார் அவளுடைய தந்தை.

முதுகு முழுவதும் வரி வரியாகத் தழும்புகள். அவளைக் கொடூரமாக அடித்திருக்கிறார்கள். பாலியல் பலாத்காரமும் செய்யப்பட்டிருக்கிறாள் என்று தெளிவாகத் தெரிந்தது. தேவதையைப் போன்ற அந்தப் பிஞ்சு முகத்தில் பிரமை பிடித்திருந்தது. "இவளைப் பேச வைக்க முடியவில்லையே. இனிமேல் பேசவே மாட்டாளோ" தந்தையின் குரல் உடைந்தது.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த அமீனா என்ற 30 வயதுப் பெண் என்னிடம் பேசத் தொடங்கினாள்:

"நான் ஒரு பெண்ணைப் பார்த்தேன். அவளுக்கு 20 வயதில் ஒரு அழகான மகள். "என் பெண்ணை எதுவும் செய்து விடாதீர்கள். நான் பணம் வேண்டுமானாலும் தருகிறேன்" என்று அவள் இந்துக்களிடம் கெஞ்சினாள். அவர்கள் பணத்தை வாங்கிக் கொண்டார்கள். பிறகு ஒருவர் பின் ஒருவராக பத்து பேர் அவளைக் கற்பழித்தார்கள். அந்தப் பெண்ணும் இப்படித்தான். பிரமை பிடித்துப் போய் பேசுவதே இல்லை. அப்புறம் அவள் என்ன ஆனாளோ தெரியவில்லை."

**— டாம் மோரேஸ், எழுத்தாளர்,** குஜராத் அகதி முகாம்களுக்கு நேரில் சென்று பார்த்து எழுதிய கட்டுரையிலிருந்து. **தி இந்து,** 24.3.2002

**"அப்புறம் அவள் என்ன ஆனாளோ தெரியவில்லை"**

இந்தத் துயரம் தோய்ந்த சொற்கள் யாரோ ஒரு அப்பாவி முசுலீம் பெண்ணின் முடிவை மட்டும் சொல்லவில்லை. முசுலீம் மக்களுக்கெதிராக ஆர்.எஸ்.எஸ் கும்பல் நடத்திய எல்லாக் கலவரங்களின் முடிவையும் தெரிவிக்கின்றன அந்த சொறகள்.

அத்வானி நடத்திய ரத்த யாத்திரை, செங்கல் ஊர்வலம், பாபர் மசூதி இடிப்பு... என ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆர்.எஸ்.எஸ். காலிகளால் நரவேட்டையாடப்பட்ட முசுலீம் மக்களுக்கு அப்புறம் என்ன நடந்தது?

வீடிழந்தவர்கள், தொழிலிழந்தவர்கள், கை காலிழந்தவர்கள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், கணவனை இழந்த பெண்கள், வன்புணர்ச்


படிப்பகம்

சிக்கு ஆளாக்கப்பட்டு புத்தி பேதலித்த பெண்கள்... அப்புறம் என்ன நடந்தது இவர்களுக் கெல்லாம்?

இந்தக் கொலை கொள்ளை கற்பழிப்பு களில் ஈடுபட்ட ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள், அவர்கள் மீது அரைகுறையுமாகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகள், விசாரணைக் கமிசன்களுக் கெல்லாம் அப்புறம் நடந்த தென்ன?

யாருக்கும் எதுவும் நடக்கவில்லை. பகல்பூர், லக்னௌ, மீரட், கான்பூர், பிவாண்டி, சூரத், பம்பாய்... ஒரு குற்றவாளி கூடத் தண்டிக்கப்படவில்லை. மாறாக, குற்றவாளிகள் அமைச்சர்களாகியிருக்கிறார்கள். அரசு அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கிறார்கள்.




''இசுரேலின் மோடி, குஜராத்தின் ஷரோன்'' மும்பையில் ஆர்ப்பாட்டம்.

**அனுதாபம் வேண்டாம்**
**அரசியல் உணர்வு வேண்டும்!**

இந்நிலையில் குஜராத்தில் நடைபெற்ற கொடூரங்களை விவரிப்பதனால் மட்டும் என்ன பயன்? கொடூரங்களின் விவரணை அனுதாபத்தைத் தோற்றுவிக்கக் கூடும். ஆனால் அதுவே இந்துமத வெறியர்களுக்கெதிரான அரசியல் உணர்வைத் தோற்றுவித்து விடுவதில்லை.

இன்று குஜராத்தில் முசுலீம் பெண்களை அவர்களது குடும்பத்தினரின் கண் முன்னே இந்து மதவெறியர்கள் கற்பழித்தனர் என்றால் அன்று சூரத்தில் அத்தகைய கற்பழிப்புகளை வீடியோவிலேயே பதிவு செய்தனர்.

உயிருடன் எரிப்பது, குழந்தைகளைக் கண்டதுண்டமாக வெட்டிக் கொல்வது, வாக்காளர் பட்டியலை வைத்துக் கொண்டு முசுலீம்களை வீடு வீடாகத் தேடிக் கொல்வது, முசுலீம் வர்த்தகர்களை ஒழித்துக் கட்டுவது, இந்து நடுத்தர வர்க்கத்தினரும் கொள்ளையில் பங்கேற்பது, இந்து மதவெறியர்களுடன் போலீசும் கூட்டுச் சேர்ந்து முசுலீம்களைக் கொலை செய்வது, மசூதிகளை இடிப்பது:... என 1993 பம்பாய்ப் படுகொலையில் சிவசேனா - பா.ஜ.க. கும்பல் எதையெல்லாம் செய்ததோ அவையனைத்தும் முன்பைவிட விரைவாக, குரூரமாக, திட்டமிட்ட முறையில் குஜராத்தில் அரங்கேறியுள்ளன.

டாம் மொரேஸ் கூறுகின்ற சம்பவம் நம் அன்றாட வாழ்க்கையில் நடந்திருந்தால் பழிக்குப் பழி வாங்குவதற்காக அந்தப் பத்துப் பேரையும் கொலை செய்திருந்தாலும் அதை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள். இதுவே திரைக்கதையாக இருந்தால் எதிரிகள் 100 பேரைக் கதாநாயகன் ரத்தம் சொட்டச் சொட்ட அடித்துக் கொல்லும் வன்முறைக் காட்சியைத் தணிக்கைக் குழுவும் ஏற்றுக் கொள்ளும்.

**பழிவாங்குவதைத் தடுக்க**
**பொடா சட்டம்**

ஆனால் பாரதீய ஜனதாக் கட்சியோ அத்தகைய 'பயங்கரவாத' நடவடிக்கைகளை முன் கூட்டியே தடுப்பதற்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அவசர அவசரமாக நிறைவேற்றியுள்ளது.

அத்வானி யாரையெல்லாம் சொல்லி பயங்கரவாதப் பூச்சாண்டி காட்டுகி

> எதிர்த்துப் போராடுவதற்கு 'இசுலாமியத் தீவிரவாதம்' என ஒன்று இல்லாவிட்டால், அரசியலரங்கில் தனது இருப்பே கேள்விக்குள்ளாகிவிடும் என்பதுதான் பா.ஜனதாவின் நிலைமை.

றாரோ அவர்கள் யாரும், எந்த அமைப்பும் மூன்றே நாளில் 2000 பேரை எரித்துக் கொன்றதில்லை; ஆயிரம் ஓட்டல்களையும், ஆயிரம் லாரிகளையும், நூற்றுக்கணக்கான கார்களையும், ஆயிரக்கணக்கான வீடுகளையும், 17 தொழிற்சாலைகளையும், 500 மசூதிகளையும் மூன்றே நாட்களில் எந்தப் பயங்கரவாதியும் எரித்துச் சாம்பலாக்கியதில்லை. மூன்றே நாளில் சுமார் இரண்டு லட்சம் மக்களைத் தம் சொந்த ஊரிலேயே யாரும் அகதிகளாக்கியதில்லை.

பல்வேறு பத்திரிகையாளர்களும், ஹர்ஷ் மந்தேரும் அதிர்ச்சியுடன் குறிப்பிடுகின்ற வக்கிரமான முறைகளில் யாரும் இனப் படுகொலை நடத்தியதில்லை.

இருப்பினும், ''கோத்ரா ரயில் பெட்டி எரிப்புதான் பயங்கரவாதமென்றும், அதற்குப் பின் குஜராத் முழுவதும் நடைபெற்றவை பயங்கரவாத நடவடிக்கைகள் அல்ல'' என்றும் கூறியிருக்கிறார் அத்வானி.

பார்ப்பான் சூத்திரனைக் கொன்றால் அது நீதி. ஆனால் பதிலுக்குச் சூத்திரன் பார்ப்பானைத் தாக்க நினைத்தாலே அது மரண தண்டனைக்குரிய குற்றம்! அதாவது மனுநீதியின் திருத்தி பாலிஷ் செய்யப்பட்ட 21-ம் நூற்றாண்டுப் பதிப்புத்தான் பொடா.

பொடா சட்டத்தை இந்தக் கோணத்தில் சித்தரிப்பது தவறென்றோ, மிகையென்றோ கருதும் வாசகர்கள் கீழ்கண்ட செய்தியைக் கேளுங்கள்:

**முசுலீம் அகதிகளால்**
**இந்துக்களுக்கு ஆபத்தாம்!**

இந்துமதவெறியர்கள் நடத்திய கொலைவெறியாட்டத்தில் வீடு, வாசல் சொந்த பந்தங்களைப் பறிகொடுத்த முசுலீம் மக்களில் 6000 பேர் அகமதாபாத்தின் தாரியாபூர் அகதி முகாமில் அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட முசுலீம்கள் 6000 பேர் ஒரே இடத்தில் குவிந்திருப்பது அருகாமையில் வாழும் இந்துக்களுக்கு ஆபத்தென்றும், அவர்களை அங்கிருந்து அகற்ற வேண்டும் என்றும் உள்துறை அமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்

www.padippakam.com

கிறார் குஜராத்தின் சிவில் சப்ளைஸ் அமைச்சர் பாரத் பரோட்.

தின்னச் சோறில்லாமல், உடுத்த உடையில்லாமல், மேலே கூரையுமில்லாமல் ஒண்டிக் கொண்டிருக்கும் பரிதாபத்திற்குரிய முசுலீம் மக்களைக் கண்டால் அருகில் வாழும் இந்துக்களுக்குப் பயமாயிருக்கிறதாம். இப்படிப் 'பய முறுத்துவதைத்தான்' பயங்கரவாதமென்றும் அதைத் தடுக்க வேண்டுமென்றும் சொல்கிறது மத்திய அரசு. இந்த வரைவிலக்கணப்படி அகதி முகாம்களனைத்தும் பயங்கரவாத முகாம்கள்! இன்றைய அகதிகள் - நாளைய பயங்கரவாதிகள்!

ஏற்கனவே அகதி முகாம்கள் சிறைச்சாலைகளாகத்தான் உள்ளன. ஆர்.எஸ்.எஸ். காலிகளுடன் சேர்ந்து கொண்டு எந்தப் போலீசார் முசுலீம் மக்களைச் சூறையாடினார்களோ, அவர்கள்தான் அங்கே 'காவல்' இருக்கிறார்கள். அகதி முகாம்களும் ஆர்.எஸ்.எஸ். குண்டர்களால் தாக்கப்படுகின்றன.

ஒரு நாளைக்கு மட்டுமே போதுமான தானியத்தைக் கொடுத்து ''ஒரு வாரத்திற்கான உணவு'' என்று கணக்கு சொல்கிறது குஜராத் அரசு. இசுலாமிய அமைப்புகளும் தொண்டு நிறுவனங்களும்தான் உண்மையில் முகாம்களைப் பராமரிக்கின்றன. முகாம்களில் கழிப்பிடமில்லை. மருத்துவ வசதி இல்லை. கொள்ளை நோய்கள் பரவும் அபாயம் நிலவுவதாக எச்சரிக்கிறார்கள் மருத்துவர்கள்.

கை, கால்கள் வெட்டப்பட்டும், தீயில் பாதி வெந்து போன உடலுடனும் முகாம்களில் தவிப்பவர்கள் பலர். அவர்களை உடனே மருத்துவமனைக்குப் போகச் சொல்கிறார்கள் மருத்துவர்கள். முகாமை விட்டு வெளியே சென்றால் இந்து வெறியர்களால் கொல்லப்படுவோமென்று அஞ்சி உள்ளேயே இருந்து அவர்கள் சித்திரவதையை அனுபவிக்கிறார்கள்.

### வெட்டு, கொல்லு ஜெய் ஸ்ரீராம்!

எரிந்து போன வீட்டில் ஏதாவது மிச்சமிருக்கிறதா என்று பார்ப்பதற்காகத் தங்கள் வீட்டுக்குச் சென்ற சிலர் முகாமுக்குத் திரும்பவில்லை அவர்கள் அங்கேயே கொல்லப்பட்டு விட்டார்கள்.




இரவு நேரத்தில் யாரும் அறியாமல் தங்கள் வீட்டை ஒருமுறை பார்க்க விரும்பிச் சென்றவர்கள் ''வெட்டு, கொல்லு, ஜெய் ஸ்ரீராம்'' (காடோ, மாரோ, ஜெய் ஸ்ரீராம்) என்ற கூச்சலைக் கேட்டு அலறியடித்துக் கொண்டு முகாமிற்கு ஓடிவந்திருக்கிறார்கள்.

என்னென்ன வெறிக் கூச்சல்களுடன் இந்து மதவெறிக் குண்டர்கள் கொலை வெறியாட்டம் நடத்தினார்களோ அந்தக் கூச்சல்களையே ஒலிநாடாவில் பதிவு செய்து முசுலீம் குடியிருப்புப் பகுதிகளில் நள்ளிரவில் திடீர் திடீரென் ஒலிபரப்பி திகிலூட்டுகிறது ஆர்.எஸ்.எஸ். கும்பல்.

அகதிகள் யாரும் இனித் தம் வீட்டுக்குத் திரும்ப இயலாது. கிராமப்புறங்களில் அவர்களது நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. அகமதாபாத்திலோ முசுலீம்கள் குடியிருந்த வீடுகள் புல்டோசரால் இடித்துத் தரைமட்டமாக்கப்படுகின்றன. சொத்துக்களை வந்த விலைக்கு விற்றுவிட்டு சபர்மதி ஆற்றின் மறுகரைக்குக் குடியேறுகிறார்கள் முசுலீம்கள். இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியில் இனி முசுலீம்கள் குடியிருக்க இயலாது என்பது எழுதப்படாத விதியாகிவிட்டது.

முசுலீம்கள் பாதுகாப்பாக உணர்வதுதான் முக்கியம், என்பதால் நகரத்துக்கு வெளியே அகதிகளுக்கு ஒரு துண்டு நிலம் ஒதுக்கித் தந்து விடுங்களென்று தேசிய சிறுபான்மைக் கமிசனின் தலைவரே குஜராத் அரசிடம் கோரிக்கை வைத்துள்ளார். (டைம்ஸ் ஆப் இந்தியா, மார்ச் -27). பஞ்சமர்கள் என்று தாழ்த்தப்பட்ட மக்களைச் சேரிக்கு ஒதுக்கிய பார்ப்பன மதவெறிக் கும்பல் முசுலீம்களை ஆறாவது பிரிவாக்கி அவர்களுக்கான சேரியையும் உருவாக்கிவிட்டது.

ஒரு சமூகத்தினரைத் துன்புறுத்துவதற்கும் இழிவு படுத்துவதற்கும், சித்திரவதை செய்வதற்கும் 'இதுதான் எல்லை' என்று நீங்கள் கருதினால் இதற்கும் ஒரு படி மேலே போகிறது ஆர்.எஸ்.எஸ். கும்பல்.

சந்தைக்குக் காய்கறி வாங்கச் சென்ற முசுலீம் பெண்களைக் கல்லெறிந்து விரட்டிவிட்டு 'முசுலீம்களுக்கு விற்காதே' என வியாபாரிகளை மிரட்டுகின்றனர் ஆர்.எஸ்.எஸ். காலிகள். ''முசுலீம்களுடன் சேர்ந்து தொழில் நடத்தாதே, முசுலீம்களிடம் வேலை செய்யாதே, முசுலீம்களை வேலைக்கு வைத்துக் கொள்ளாதே - இங்ஙனம் தேசபக்தன்'' என்று அச்சிட்டப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் எங்கும் விநியோகிக்கப்படுகின்றன.

### இதுதான் இந்துராஷ்டிரம்

இத்தகைய சூழ்நிலையில் முசுலீம் மக்கள் எப்படி இந்த நாட்டில் வாழ முடியும்?

''சிறுபான்மையினர் இந்த நாட்டில் வாழலாம். இந்து தேசத்திற்குக் கீழ்ப்படிந்தவர்களாக, எதையும் கோராதவர்களாக, எந்தவிதச் சலுகைக்கும் தகுதியற்றவர்களாக இந்த நாட்டின் குடிமகன் என்ற உரிமையற்றவர்களாக வாழலாம்.''

— கோல்வால்கர்
ஆர்.எஸ்.எஸ். தலைவர்,
'நாம் அல்லது நமது தேசியம்'
எனும் நூலில்

**அத்வானி யாரையெல்லாம் சொல்லி பயங்கரவாதப் பூச்சாண்டி காட்டுகிறாரோ அவர்கள் யாரும் மூன்றே நாளில் 2000 பேரை எரித்துக் கொன்றதில்லை.**


படிப்பகம்

www.padippakam.com

## முசுலீம் இல்லை என்று நடித்து உயிர் தப்பிய பி.பி.சி. பத்திரிகையாளரின் கதை

கோத்ரா சம்பவம் பற்றி அறிந்தவுடன் டெல்லியிலிருந்து புறப்பட்டு அகமதாபாத் சென்றேன்... நகரில் நுழையும் இடத்தில் சிலர் தர்ணா செய்து கொண்டிருந்தனர். காரை நிறுத்திப் பேசலாமா என்று ஒரு கணம் நினைத்தேன். ஏனோ என் முடிவை மாற்றிக் கொண்டு அங்கிருந்து வேகமாக அகன்றேன்.

எதிரில் 200 பேர் கையில் தீப்பந்தங்களுடன் காரை மறித்தனர். ''நீங்கள்பேசாதீர்கள்'' என்று எனக்கு சைகை செய்தார் டிரைவர். ''நாங்கள் பி.பி.சி.யிலிருந்து வருகிறோம். கோத்ரா படுகொலை பற்றி எழுதப் போகிறோம்'', என்று நீண்ட நேரம் பேசி மன்றாடி அவர்களிடமிருந்து தப்பித்தோம்.

சிறிது நேரத்தில் இன்னொரு கும்பல். ''உன் அடையாள அட்டையைக் காட்டு'' என்று கத்தினான் ஒருவன். பக்கத்தில் நின்ற காரிலிருந்து ஒரு ஆளை வெளியே இழுத்துப் போட்டு கத்தியால் குத்திக் கொண்டிருந்தார்கள். ஓரக் கண்ணால் அதைப் பார்த்தேன். ''அட்டைய காட்டுடா'' அவன் மீண்டும் கத்தினான்.

நான் என் அடையாள அட்டையை விருட்டென்று எடுத்து அவன் முகத்துக்கு அருகே நீட்டினேன், அட்டையிலிருந்த என் பெயரைக் கவனமாகக் கட்டை விரலால் மறைத்துப் பிடித்துக் கொண்டேன். அவனுக்கு ஆங்கிலம் தெரியாது போலும்! பிழைத்தேன்... ஆனால் வியர்வையில் தெப்பமாய் நனைந்து விட்டேன்.

பத்து கிலோ மீட்டர் கூடச் சென்றிருக்க மாட்டோம். ஒரு பெரிய கும்பல் வீடுகளுக்குத் தீ வைத்துக் கொண்டிருந்ததைப் பார்த்தேன்.

நான் என்னுடைய அடையாள அட்டை, வங்கி கிரெடிட் கார்டு போன்ற என் பெயர் உள்ள எல்லா அட்டைகளையும் மிதியடிக்கு அடியில் ஒளித்து வைத்தேன். என் மனைவியின் கிரெடிட் கார்டு மட்டும்தான் என் பையில் இருந்தது...

நெற்றியில் மஞ்சள் துணியைக் கட்டிய ஒருவன் வந்தான். ''நீ முசுலீமா'' என்றான். நான் இல்லையென்று தலையாட்டினேன். அட்டையைக் காட்டச் சொன்னான்.

உடனே என் மனைவியின் கிரெடிட் கார்டை எடுத்து நீட்டினேன். அவள் பெயர் ரிது ராஜ்புத் (அவள் இந்து). அட்டையை வாங்கிப் பார்த்துவிட்டு அதை 'ஹிரித்திக்' என்று அவன் படித்தான். ''அவன் பெயர் ஹிரித்திக். அவன் போகட்டும்'' என்றான்.

மீண்டும் உயிர் தப்பினேன்.

''பெரும்பான்மையினரின் நல்லெண்ணத்தைப் பெறுவதுதான் சிறுபான்மையினருக்கு உண்மையான பாதுகாப்பு'' என்ற ஆர்.எஸ்.எஸ்.ஸின் பெங்களூர் தீர்மானம் இதே விசயத்தைத்தான் வேறு வார்த்தைகளில் கூறுகிறது.

'பாதுகாப்பாக' வாழவேண்டுமானால் 'சட்டம் - உரிமை - சுயமரியாதை' என்று பேசாமல் அடிமைகளாக வாழ ஒத்துக் கொள்ள வேண்டும் என்று பார்ப்பன உயர்சாதி இந்துக்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கூறுவதைத்தான் ஆர்.எஸ்.எஸ். கும்பல் முசுலீம்களுக்கும் கூறுகிறது.

இந்த அடிமைத்தனத்தை முசுலீம் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதும் எதிர்த்துப் போராடுவார்கள் என்பதும் பார்ப்பன இந்து வெறியர்கள் அறியாததல்ல.

தங்களுக்கு எதிரான முசுலீம்களின் கோபத்தை 'சாதாரண இந்துக்கள்' மீதான தாக்குதலாக மடைமாற்றி விடுவதுதான் ஆர்.எஸ்.எஸ்.-இன் நோக்கம். தொடர்ச்சியான ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் மூலம் முசுலீம் மக்களை இசுலாமியத் தீவிரவாதத்தின் பக்கம் தள்ளிவிடுவதுதான் அவர்களது திட்டம்.

### இசுலாமிய தீவிரவாதத்தைத் தூண்ட ஆர்.எஸ்.எஸ். சதி!

எதிர்த்துப் போராடுவதற்கு ''இசுலாமியத் தீவிரவாதம்'' என ஒன்று இல்லையென்றால் தன்னுடைய இருப்பே கேள்விக்குள்ளாகி விடும் என்பதுதான் அரசியலரங்கில் பா.ஜ. கும்பலின் இன்றைய நிலைமை.

சாதி, தீண்டாமை, இன -மொழி ஒடுக்குமுறை ஆகியவற்றைத் தன் இதயமாகக் கொண்ட இந்துத்துவக் கொள்கைகளைச் சொல்லி பார்ப்பன மேல்சாதியினரிலேயே ஒரு சிறு பிரிவைத்தான் ஆர்.எஸ்.எஸ்.ஆல் திரட்ட முடிந்திருக்கிறது.

உள்ளூர் அளவில் எழும் பிரச்சினைகளுக்கு இந்து - முசுலீம் சாயம் பூசி கலவரத்தைத் தூண்டினாலும் அது உள்ளூர் எல்லையைத் தாண்டுவதில்லை; நீடித்து நிற்பதுமில்லை.

'வரலாற்றுப் பழி தீர்ப்பது' என்ற பெயரில் தொடங்கிய அயோத்தி பிரச்சினையோ உத்தரப் பிரதேசத்திலேயே இன்று போணியாகவில்லை. இத்தனை அமர்க்களங்களுக்குப் பின்னரும் அயோத்தி நகரத்தில் ஒரு சொறிநாய் கூட ராமன் கோவில் பிரச்சினையைத் திரும்பிப் பார்க்கவில்லை.

''அணுகுண்டு - கார்கில் - காசுமீர் - பாகிஸ்தான் எதிர்ப்பு தேசவெறி'' என்பதற்கெல்லாம் சிட்டுக்குருவி லேகியம் போல சிறிது நேரத்திற்கு மேல் வீரியம் இருப்பதில்லை.

''பொடோ சட்டத்தை எதிர்ப்பவன் தேசவிரோதி'' என்று உ.பி. சட்டசபைத் தேர்தலில் பிரச்சாரம் செய்தால், மக்கள் 'தேசவிரோதிகளுக்கே' வாக்களித்து பா.ஜ.க.வை மூன்றாவது இடத்துக்குத் தள்ளி விட்டார்கள்.

தனியார் மயம், ஆட்குறைப்பு, மானிய வெட்டு, சிறுதொழில்கள் அழிப்பு போன்ற மறுகாலனியாக்க நடவடிக்கைகளும், லஞ்ச - ஊழல் கிரிமினல் நடவடிக்கைகளில் காங்கிரசை விஞ்சிய கட்சிதான் பாரதீய ஜனதா என்று மக்கள் பெற்ற அனுபவமும், அடுக்கடுக்கான தோல்விகளை பாரதீய ஜனதாவிற்குத் தந்திருக்கின்றன.

டில்லி அதிகாரத்தில் ஒட்டிக் கொண்டிருந்தாலும் மாநிலங்களில் பா.ஜ.க. ஏறத்தாழத் துடைத்தெறியப்பட்டு விட்டது. எஞ்சியிருப்பவை குஜராத், கோவா, இமாச்சலப் பிரதேசம் ஆகியவை மட்டுமே. குஜராத்தில் சமீபத்திய உள்ளாட்சித் தேர்தலில் படுதோல்வி; தற்போது அயோத்தி விவகாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே டெல்லி மாநகராட்சித் தேர்தலில் படுதோல்வி...

எனவே இந்து மதவெறிக் கும்பல் அதிகாரத்தில் நீடிப்பதற்கே இசுலாமியத் தீவிரவாதத்தின் 'தயவு' அதற்குத் தேவைப்படுகிறது. ''இந்துத்துவ கொள்கைகளில் தீவிரமாக இல்லாத காரணத்தினால்தான் நாம் அடுக்கடுக்காகத் தோல்விகளைச் சந்திக்கிறோம்'' என்று சங்க பரிவாரத்தினர் கூறுவதற்கு பொருள், ''முசுலீம் மக்களுக்கு ஆத்திரமூட்டுமளவுக்கு நமது செயல்பாடுகள் அமையவில்லை'' என்பதுதான்.

குஜராத் படுகொலை - இசுலாமியத் தீவிரவாதத்திற்கு இந்துமத வெறியர்கள் விடுக்கும் அழைப்பு. இந்த அழைப்பை இசுலாமியத் தீவிரவாதிகள் நிராகரித்து விட்டால்... வேறு வழியில்லை. இசுலாமியத் தீவிரவாதியின் பாத்திரத்தையும் இந்து வெறியர்களே ஏற்று நடிப்பார்கள்.

● சூரியன்

www.padippakam.com

*ஹர்ஷ் மந்தேர் 22 ஆண்டுகளாக ஐ.ஏ.எஸ். அதிகாரியாகப் பணியாற்றியவர். நேர்மையான அதிகாரி என்று பெயரெடுத்தவர்; 22 ஆண்டுகளில் 18 முறை இடமாற்றம் செய்யப்பட்டவர்.*

*குஜராத்தில் இந்து மதவெறியர்களுடன் போலீசும், அதிகார வர்க்கமும் கூட்டுச் சேர்ந்து நடத்திய இனப்படுகொலையை நேரில் கண்டபின் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டார். டைம்ஸ் ஆப் இந்தியா நாளேட்டில் அவர் எழுதியுள்ள கட்டுரையின் சுருக்கப்பட்ட மொழியாக்கம்.*



# "இப்படியொரு சோகத்தை நான் கண்டதேயில்லை"

**– ஹர்ஷ் மந்தேர்**

பயங்கரமும் படுகொலையும் தாண்டவமாடிய குஜராத்திலிருந்து வருகிறேன். வெறுப்பாலும் அச்சத்தாலும் நான் மரத்துப் போய்விட்டேன். என் இதயம் நோயுற்று ஆன்மா நைந்துவிட்டது. குற்றவுணர்வையும் அவமானத்தையும் சுமக்கும் வலிமையின்றி என் தோள்கள் வலிக்கின்றன.

அகமதாபாத் கலவரத்தில் தப்பிப் பிழைத்த அகதிகள் சுமார் 53,000 பேர். சாக்குக் கூரைகளின் கீழே ஒண்டிக் கொண்டிருக்கும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள்... அவர்களது முகத்தில் ததும்பும் துயரம்.... இப்படியொரு துக்கத்தை நான் இதுவரை கண்டதில்லை. வறண்டு போன கண்கள்; நிவாரணப் பொருட்களை இறுகப் பற்றிய அவர்களது கைகள்; இனி இந்த உலகத்தில் இது மட்டும்தான் அவர்களிடம் எஞ்சியிருக்கும் உடைமை.

அச்சம் படர்ந்த தணிந்த குரலில் சிலர் பேசிக் கொள்கிறார்கள்; சமையல் வேலை, பிள்ளைகளுக்குப் பால், காயம் பட்டவர்களுக்கு மருந்து... என்று ஆக வேண்டிய வேலைகளைக் கவனிக்கிறார்கள் மற்றவர்கள்.

ஆனால் ஏதாவது ஒரு முகாமில் நீங்கள் உட்கார்ந்தால் உடனே அவர்கள் பேசத் தொடங்குகிறார்கள். புரையோடிய புண்ணிலிருந்து பீய்ச்சியடிக்கும் சீழ் போல, சொற்கள் நம் முகத்தில் பட்டுத் தெறிக்கின்றன. அந்தக் கோரங்களை எழுதவே என் பேனா தடுமாறுகிறது...

இருப்பினும், கண்டவை கேட்டவைகளில் ஒரு சிறு துளியையாவது நான் எழுத நினைக்கிறேன். ஏனென்றால் நாம் அனைவரும் இதைத் தெரிந்து கொண்டாக வேண்டும். எனக்கும் யாரிடமாவது சுமையைக் கொஞ்சம் இறக்கி வைக்க வேண்டும்.

ஒரு எட்டு மாதக் கர்ப்பிணிப் பெண். தன்னை விட்டுவிடுமாறு கதறியிருக்கிறாள். அவளுடைய வயிற்றைக் கீறி, அந்தக் குழந்தையை வெளியிலெடுத்து, அவள் கண்ணெதிரிலேயே கண்டதுண்டமாக வெட்டிக் கொன்றிருக்கிறார்கள். இதற்கென்ன சொல்கிறீர்கள்?

19 பேர் கொண்ட ஒரு குடும்பம். அந்த வீட்டிற்குள் தண்ணீரைப் பீய்ச்சியடித்து, பிறகு உயர் அழுத்த மின்கம்பியை உள்ளே தூக்கிப் போட்டு அத்தனை பேரையும் கொன்றிருக்கிறார்கள். என்ன சொல்கிறீர்கள்?

தன்னுடைய அம்மாவும், அக்காள்கள், அண்ணன்கள் ஆறு பேரும் தன் கண் முன்னால் அடித்தே கொல்லப்பட்டதை விவரிக்கிறான் ஜுகாபரா முகாமில் இருக்கும் ஒரு ஆறு வயதுச் சிறுவன். அடித்த அடியில் அந்தப் பையன் செத்துவிட்டதாக நினைத்து விட்டிருக்கிறார்கள்.



ஹர்ஷ் மந்தேர் - பதவி விலகல்

மிக மோசமாகத் தாக்கப்பட்ட நரோடா பாட்டியா பகுதியிலிருந்து ஒரு குடும்பம் தப்பி ஓடியிருக்கிறது. 3 மாதக் கைக்குழந்தையுடனிருந்த மகளால் ஓட முடியவில்லை. "எந்தப் பக்கம் போனால் தப்பிக்கலாம்" என்று அங்கிருந்த போலீசுக்காரனிடம் அவள் வழி கேட்டாள். அவன் காட்டிய திசையில் நம்பிக்கையோடு சென்றாள். அங்கே தயாராக்க் காத்திருந்த கும்பல் அவளையும் குழந்தையையும் மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்தியது.

பெண்களின் மீதான பாலியல் வன்முறை வேறு எந்தக் கலவரத்தின் போதும் இவ்வளவு கொடூரமாக நடந்ததில்லை. குடும்ப உறுப்பினர்கள், சிறுவர் சிறுமிகளின் கண் முன்னே பெண்களைக் கும்பல் கும்பலாகக் கற்பழித்திருக்கிறார்கள். கற்பழிப்பு முடிந்தவுடன் அந்தப் பெண்களை எரித்துக் கொன்றிருக்கிறார்கள்; சுத்தியலால் மண்டையில் அடித்தே கொன்றிருக்கிறார்கள்; ஒரு இடத்தில் ஸ்குரு டிரைவரால் குத்தியே கொன்றிருக்கிறார்கள்.

அமன் சௌக் முகாமிலிருந்த பெண்கள் கூறியவற்றைக் கேட்கவே குலை நடுங்குகிறது. திடீரென வீடு புகுந்த கும்பல், பெண்களின் முன்னே தங்கள் ஆடைகளை ஒவ்வொன்றாய்க் களைந்து விட்டு கையில் பயங்கரமான ஆயுதங்களுடன் அம்மணமாக நின்று பெண்களை

www.padippakam.com



தேசிய மனித உரிமைக் கமிசன்: நீதிபதி வர்மாவிடம் முஸ்லீம் சிறுவனின் வாக்குமூலம்

நடுங்கச் செய்து பணிய வைத்திருக்கிறது.

அகமதாபாத்தில் நான் சந்தித்த பத்திரிகையாளர்கள், சமூக சேகவர்கள், உயிர் பிழைத்த மக்கள் ஆகிய அனைவரும் கூறுவது இதுதான். "குஜராத்தில் நடந்தது கலவரமல்ல; ஒரு பயங்கரவாதத் தாக்குதல், திட்டமிட்ட இனப் படுகொலை". ஒரு இராணுவத் தாக்குதலைப் போல எல்லாமே திட்டமிட்டு நடத்தப்பட்டிருக்கிறது.

வெறியூட்டும்படியான கோஷங்களை ஒலிபரப்பியபடியே முதலில் ஒரு லாரி வரும். பின்னாலேயே வரிசை வரிசையாக வரும் லாரிகள் காக்கி டவுசரும், நெற்றியில் காவித்துணியும் கட்டிய ஆட்களைக் கும்பல் கும்பலாக இறக்கி விடும். வெடி பொருட்கள், திரிசூலம், கோடரி போன்ற ஆயுதங்களுடன் களைப்பைப் போக்கிக் கொள்ள தண்ணீர் பாட்டில்களையும் அவர்கள் கையில் கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு கும்பலின் தலைவன் கையிலும் செல்போன். உத்திரவுகள் போனில் வந்து கொண்டிருந்தன. கைகளில் முசுலீம் குடும்பங்களின் பெயர்கள், சொத்து விவரம் அடங்கிய கம்ப்யூட்டர் காகிதங்களை அவர்கள் வைத்திருந்தார்கள்... இந்து-முசுலீம் கலப்பு மணம் செய்து கொண்டவர்கள் யார், அவர்களில் யாரைத் தாக்க வேண்டும் என்பது வரை துல்லியமான விவரங்கள் அவர்கள் கையில் இருந்தன... இது ஒரு திட்டமிட்ட இனப்படுகொலை.

வசதியான முசுலீம்களின் வீடுகள் கடைகள் முதலில் சூறையாடப்பட்டன. பிறகு லாரிகளில் கொண்டு வந்த காஸ் சிலிண்டர்களை கட்டிடத்திற்குள் வைத்துத் திறந்து விடுவார்கள். பிறகு பயிற்சி பெற்ற ஒரு நபர் நெருப்பைக் கொளுத்திப் போடுவான். கட்டிடம் தீப்பிடித்து எரியும்...

மசூதிகளும் தர்காக்களும் இடித்துத் தள்ளப்பட்டு அங்கே அனுமார் சிலையும் காவிக் கொடியும் நட்டுவைக்கப்பட்டுள்ளன. அகமதாபாத் நகரின் சாலை சந்திப்புகளில் இருந்த சில பிரபலமான தர்காக்கள் ஒரே இரவில் இடிக்கப்பட்டு... அதன்மீது சாலையும் போடப்பட்டு விட்டது. இதற்கு முன் அந்த இடத்தில் ஒரு தர்கா இருந்ததே இல்லை என்பது போல அந்தப் புதிய சாலை மீது இப்போது வாகனங்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன.

போலீசு மற்றும் அரசு எந்திரத்தின் பழிக்கு அஞ்சாத அலட்சியத்தையும், நேரடியான கூட்டுக் களவாணித்தனத்தையும் எல்லோரும் குற்றம் சாட்டுகிறார்கள். பெண்கள் குழந்தைகளின் கதறலுக்குக் கூட அவர்கள் மனமிரங்கவில்லை. கொலை கொள்ளை கற்பழிப்புக்குத்தான் அவர்கள் பாதுகாப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

யார் கலவரக் கும்பலின் தாக்குதலுக்குப் பலியானார்களோ அந்த முசுலீம் மக்கள் மீதுதான் போலீசும் துப்பாக்கிச் சூடு நடத்தியிருக்கிறது. பல செய்திகள் இதைத்தான் கூறுகின்றன. கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பான்மையினரும் முசுலீம்கள்தான்.

இருபது ஆண்டுகளாக ஐ.ஏ.எஸ். அதிகாரியாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவன் என்ற முறையில் என்னுடைய சகாக்களான ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் அதிகாரிகள் தங்கள் கடமைக்கு இழைத்த துரோகத்தை எண்ணி நான் வெட்கப்படுகிறேன். அரசியல்வாதிகளின் உத்தரவுக்குக் காத்திருக்க வேண்டும் என்று எந்தச் சட்டமும் அவர்களைக் கட்டுப்படுத்தவில்லை. சுயேச்சையாகவும், நடுநிலையாகவும், அச்சமின்றியும் செயல்பட வேண்டுமென்றுதான் சட்டம் அவர்களைக் கோருகிறது...

அகமதாபாத்தில் ஒரே ஒரு அதிகாரியாவது நேர்மையரக நடந்து கொண்டிருந்தால்... இராணுவத்தை அழைத்து வன்முறையை நிறுத்தியிருக்க முடியும். உள்ளூர்ப் போலீசு மற்றும் அதிரிகாரிகளின் உதவியில்லாமல் எந்த ஒரு கலவரமும் சில மணி நேரத்திற்கு மேல் நீடிக்க முடியாது.

கொலையுண்ட ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களின் ரத்தம் குஜராத் அதிகாரிகளின் கையில் படிந்திருக்கிறது. அவர்கள் மட்டுமல்ல, இதைக் கண்டும் காணாதது போல சதிகாரத்தனமாக மவுனம் சாதிக்கும் இந்த நாட்டின் உயர் அதிகாரிகள் அனைவருமே இந்தப் படுகொலையின் குற்றவாளிகள்தான்...

இனப்படுகொலை உச்சத்தில் இருந்த போது சொத்துக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சபர்மதி ஆசிரமத்தின் வாயிற்கதவுகள் மூடப்பட்டிருந்ததாக பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. அந்த ஆசிரமமல்லவா மக்களுக்கு முதல் புகலிடமாக இருந்திருக்க வேண்டும்! கொலைக் கும்பல்களைத் தடுத்து நிறுத்த எந்தக் காந்தியவாதி தன் உயிரைப் பணயம் வைத்துக் களத்தில் நின்றார்?

இந்த நாட்டின் குடிமக்கள் என்ற முறையில் ஏற்கனவே நாம் பல அவமானங்களைச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டிருக்கிறோம். இதோ... இன்னொரு பெருத்த அவமானம்! பாதிக்கப்பட்ட முசுலீம் மக்களுக்காக அகமதாபாத் நகரில் நடத்தப்படும் அகதி முகாம்களெல்லாம் இசுலாமிய அமைப்புகளால்தான் நடத்தப்படுகின்றன.

"முசுலீம் மக்கள் அனுபவித்த துன்பம், இழப்புகள், துரோகம், அநீதி ஆகியவை பற்றியெல்லாம் சக முசுலீம்கள்தான் கவலைப்படவேண்டும்; அவர்களுக்கு ஆறுதலளிக்கவும் அவர்களுடைய வாழ்க்கையை புனரமைத்துத் தரவும் நமக்கு எவ்விதப் பொறுப்புமில்லை" என்று சொல்வது போல இருக்கிறது இந்த அணுகுமுறை....

குஜராத்தின் கொலைகாரக் கும்பல் எதையெல்லாமோ என்னிடமிருந்து திருடிச் சென்றுவிட்டது. அவற்றில் ஒன்று இந்தப் பாடல். நான் பெருமிதத்துடனும் நம்பிக்கையுடனும் பாடி வந்த பாடல். அந்தப் பாடலின் சொற்கள் இவை:

சாரே ஜஹா ஸே அச்சா
இந்துஸ்தான் ஹமாரா

இந்தப் பாடலை இனி ஒருபோதும் என்னால் பாட முடியாது.



படிப்பகம்

www.padippakam.com

# மக்களின் உயிர் வாழும் உரிமையும் மாநில அரசின் உயிர் வாழும் உரிமையும் ஓட்டுக் கட்சி நாடகம்!

"குஜராத்தில் நடந்திருப்பது ஒரு இனப் படுகொலை. அதிகார வர்க்கமும் போலீசும் அரசியல்வாதிகளும் சேர்ந்து நடத்தியுள்ள கூட்டுச் சதி இது. இந்தக் குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்தித் தண்டிக்க வேண்டும். நாட்டின் இறையாண்மை என்ற சொல்லுக்குப் பின்னால் இனப்படுகொலை ஒளிந்து கொள்ள முடியாது" என்று அவுட்லுக் வார ஏட்டில் (ஏப்ரல்-8, 2002) எழுதியிருக்கிறார் **ராஜா மேனன்** என்ற முன்னாள் கடற்படை அதிகாரி.

உணர்ச்சி வயப்பட்டோ, பரபரப்புக்காகவோ அவர் இதை எழுதவில்லை. கீழ்க்கண்டவாறு அவர் குற்றம் சாட்டுகிறார்:

★ "நகராட்சி ஆவணங்களிலிருந்து யூதர்களின் முகவரிகளைத் திரட்டி, அவர்களை அடையாளம் கண்டுபிடித்துக் கொலை செய்த நாஜிகளைப் போலவே, நகராட்சி, வேலை வாய்ப்பு அலுவலகம், வாக்காளர் பட்டியல் போன்ற ஆவணங்களை இந்து பாசிஸ்டுகள் திரட்டியிருக்கிறார்கள். இது மாநில போலீசுக்கு மட்டுமல்ல மத்திய உளவுத்துறைக்கும், அதன் மூலம் மத்திய உள்துறைச் செயலருக்கும் முன்கூட்டியே தெரிந்திருக்கும். இந்த அபாயகரமான விசயத்தை அம்பலமாக்காமல் ரகசியமாக வைத்திருந்ததன் மூலம் மத்திய அரசும் இந்த இனப்படுகொலைச் சதியில் பங்கேற்றிருக்கிறது."

★ "கோத்ராவும் கோத்ராவுக்கு பிந்தைய 'கலவரமும்' ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் அல்ல. இராணுவத்தைச் சேர்ந்த எங்களுக்குக் 'கலவரம்' என்பது என்னவென்று தெளிவாகத் தெரியும். ஒரு கலவரக் கும்பலுக்குத் தனது இலக்குகளைப் பாகுபடுத்திப் பார்க்கும் நிதானம் கிடையாது. மதத்தின் அடிப்படையில் கொலைப் பட்டியல் தயாரிப்பதும், தங்களுக்குக் காயம்படாமல் எரிவாயு சிலிண்டர்களை வெடிக்க வைத்துக் கட்டிடங்களையும், பணப் பெட்டிகளையும் தகர்ப்பது கலவரமல்ல."

★ "அரசின் ஒத்துழைப்பு இல்லாமல் ஒரு இனப்படுகொலையை எங்கேயும் நடத்த முடியாது. எனவே ஒரு இனப்படுகொலையை அரசின் உறுப்பு எதுவும் விசாரித்து நீதி வழங்கவும் முடியாது. இது மற்ற நாடுகளைக் காட்டிலும் நமது அரசுக்கு நன்றாகவே தெரியும்."

"ஏனென்றால், 1948-இல் இனப்படுகொலைக்கு எதிரான தீர்மானத்தை ஐ.நா.வில் முன்மொழிந்த நாடு இந்தியா. படுகொலைக்கு ஆளாகும் மக்களை அரசிடமிருந்து காப்பாற்றுவதற்கு அந்த நாட்டு அரசின் இறையாண்மையை மீறித் தலையிட வேண்டுமெனில் ஐ.நா. தலையிடத்தான் வேண்டும் என்கிறது அத்தீர்மானம்."

எனவே இன்னொரு இனப்படுகொலை நடக்காமலிருக்க வேண்டுமானால் குஜராத் குற்றவாளிகளை சர்வதேச அரங்கில் விசாரித்துத் தண்டிப்பதுதான் ஒரே தீர்வு என்கிறார் ராஜா மேனன். இதே கருத்தை வேறு சில பத்திரிகையாளர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

●○●

குஜராத் எரிந்து கொண்டிருந்த போது உச்ச நீதிமன்றத்தில் வேறொரு விவகாரம் பற்றியெரிந்து கொண்டிருந்தது. உச்ச நீதிமன்றத்தை எழுத்தாளர் அருந்ததி ராய் அவமதித்தது பற்றிய வழக்கு அது.

குஜராத்தின் பணக்கார விவசாயிகளுக்குப் பாசனவசதி செய்து கொடுப்பதற்காக லட்சக்கணக்கான பழங்குடி மக்களை, உரிய நிவாரணம் கூடக் கொடுக்காமல் வெளியேற்றும் நர்மதை அணைத்திட்டத்திற்கு ஆதரவாக சென்ற ஆண்டு உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எழுத்தாளர் அருந்ததி ராய் விமரிசனம் செய்தார். அதையொட்டித் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் அருந்ததி ராய்க்கு ஒருநாள் சிறைத் தண்டனையும், 5000 ரூபாய் அபராதமும் விதித்த உச்சநீதி மன்றம் தனது தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டது.,

"எவ்வளவு அதிகார பலம் பணபலம் பொருந்தியவர்களாக இருந்தாலும், யாரும் சட்டத்திற்கு மேம்பட்டவர்கள் அல்ல; சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்காகத்தான், அரசியல் சட்டம் விசேடமான பொறுப்பை இந்த நாட்டின் நீதித்துறையிடம் ஒப்படைத்திருக்கிறது.

- சட்டத்தைப் பழிக்கின்ற ஒரு நபரின் நடத்தை காரணமாக நீதிமன்றங்களின் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை தகர்ந்து போவதற்கோ, குறைந்து போவதற்கோ அனுமதிக்க முடியாது."

மார்ச்-6-ம் தேதியன்று தனது மானத்தைப் பற்றி உச்ச நீதிமன்றம் இப்படி விரிவுரையாற்றிக் கொண்டிருந்த அதே நேரத்தில் உயிருக்குப் பயந்து வீட்டை விட்டுத் தப்பித்து ஓடிக்கொண்டிருந்தார்கள் இரண்டு குஜராத் உயர் நீதிமன்ற நீதிபதிகள்.

அக்பர் திவேச்சா - குஜராத் உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றவர். தற்போது மாநில அரசு நியமித்துள்ள ஒரு கமி

**முடிவிலாத் துயரம் - போரா முசுலீம்களின் வர்த்தகம் முழுதும் அழிக்கப்பட்டு விட்டது.**





படிப்பகம்

www.padippakam.com

சனின் தலைவர். பிப்ரவரி - 28ம் தேதி இரவு அகமதாபாத்தில் உள்ள அவரது வீட்டை பெட்ரோல் குண்டுகளும் ஆசிட் பல்புகளும் தாக்கத் தொடங்கின. இர வோடிரவாக வீட்டை விட்டு ஓடினார் நீதி பதி.

அமைச்சர்கள், போலீசு அதிகாரிகள் யாருக்குப் போன் செய்தும் பயனில்லை. நீதிபதியின் வீட்டைக் கொள்ளையடித்த துடன் முழுவதுமாக தீ வைத்து எரித்தும் விட்டது இந்து மதவெறிக் கும்பல். நீதிப திகளுக்கான அரசாங்க பங்களாவில் தங்குவதற்குக் கூடப் பயந்து நகருக்கு வெளியே ஒரு நண்பரின் வீட்டில் ஒளிந்து கொண்டார் நீதிபதி!

ஓய்வு பெற்ற நீதிபதிக்கு மட்டுமல்ல; தற்போது பணியிலிருக்கும் உயர் நீதி மன்ற நீதிபதி எம்.எச். காதிரிக்கு நேர்ந்த கதியும் அதுதான். படுத்த படுக்கையாக இருக்கும் 85 வயது தாயையும், குடும் பத்துப் பெண்களையும் அழைத்துக் கொண்டு இரவோடு இரவாக வீட்டை விட்டு ஓடினார் காதிரி. தற்போதைய உச்ச நீதிமன்ற நீதிபதியான தர்மாதிகாரி என்பவர் அகமதாபாத்தில் உள்ள தனது வீட்டில் நீதிபதி காதிரிக்கு அடைக்கலம் கொடுத்தார்.

''போலீசு பாதுகாப்பை நம்பினால் உயிருக்கு உத்திரவாதம் கிடையாது'' என்று கூறிய இராணுவம் தானே நீதிபதிக் குப் பாதுகாப்பு கொடுத்தது.

''யாருக்கும் பயப்பட மாட்டோம். நீதிபதிகளை அவமதித்தவர்களை சும்மா விடமாட்டோம்'' என்று அருந்ததி ராயிடம் சண்டப் பிரசண்டம் செய்த உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கு தங்கள் 'உயர் நீதிமன்றச் சகோதரர்கள்' இரண்டு பேர் ஒரு வாரமாக உயிருக்குப் பயந்து ஒளிந்து கொண்டிருப்பது தெரியாதா?

அருந்ததி ராயின் நீதிமன்ற அவம திப்பு வழக்கை யாரும் மனுச் செய்யாமல் தானே முன்வந்து (Suo Moto) பதிவு செய்து கொண்டு அவரைச் சிறைக்கு அனுப்பிய உச்ச நீதிமன்றம், நரேந்திர மோடி மீதும் அப்படியொரு வழக்கைப் பதிவு செய்திருக்கலாமே!

இந்த மாதிரியான சிக்கலான கேள்வி களுக்கு முற்றுப்புள்ளி வைப்பது போலப் பதில் சொல்கிறார் ராஜஸ்தானின் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி ரவானி. ''நான் நீதிபதி காதிரிடம் சொன்னேன். அரசியல் சட்டத் தத்துவமெல்லாம் புத்தகத்தில் படிப்பதற்குத்தான் லாயக்கு. எதார்த்த நிலைமை இதை நிரூபித்து விட்டது.''

நீதிபதி காதிரியிடம் நீதிபதி ரவானி எந்த உண்மையைச் சொன்னாரோ,



கட்ச் மாவட்ட எஸ்.பி. விவேக் ஸ்ரீ வத்ஸவா - வி.இ.ப, சிவசேனா தலைவர் களைச் சிறை வைத்ததற்காக மாற்றல் உத்தரவு.

அதையேதான் அருந்ததி ராய் உச்ச நீதி மன்றத்திடமும் சொன்னார். ''இலட்சக்க ணக்கான பழங்குடி மக்களின் வீட்டையும் நிலத்தையும் எவ்வித நிவார ணமும் கொடுக்காமல் சட்டத்தின் பேரால் பறித்து நடுத்தெருவில் நிறுத்துகிறீர்களே, மக்களின் எதார்த்த வாழ்க்கை நிலை பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?'' என்பதுதான் அவர் முதலில் முன்வைத்த விமரிசனத்தின் மையக் கருத்து.

''சட்டத்தின் ஆட்சி என்பது வெறும் காகிதத்தில் தானிருக்கிறது'' என்ற எளிய உண்மை புரிவதற்கே நீதிபதிகளின் வீட்டின் மீது பெட்ரோல் குண்டுகள் விழ வேண்டியிருக்கிறது.

இருப்பினும், ''அரசியல் சட்டத்தின் ஆட்சி'' என்ற பேச்சு வெறும் பிதற்றல்

> **''இது அரசும் சேர்ந்து நடத்திய இனப்படுகொலை. எனவே குற்றவாளிகளை சர்வதேச அரங்கில் விசாரித்து தண்டிக்க வேண்டும்.''**
>
> **— ராஜா மேனன்**
> **ஓய்வு பெற்ற கடற்படை அதிகாரி.**
>
> **''அரசியல் சட்டமெல்லாம் புத்தகத்தில் படிக்கத்தான் லாயக்கு.''**
>
> **— ஓய்வு பெற்ற ராஜஸ்தான் தலைமை நீதிபதி ரவானி.**

என்பதை ஒப்புக் கொண்டதன் மூலம் ராஜா மேனன் கூறிய கருத்தை வேறொரு கோணத்திலிருந்து வழிமொழிந்திருக் கிறார் முன்னாள் தலைமை நீதிபதி ரவானி.

●○●

குஜராத் படுகொலையில் போலீசின் நேரடிக் கூட்டு இன்று உலகறிந்த விசயமா கிவிட்டது. பிப்ரவரி-27 கோத்ரா சம்பவம் நடந்தவுடனே பிப். 28-ஆம் தேதி 'குஜராத் பந்த்' என்று பா.ஜ.க.வும், விசுவ இந்து பரிசத்தும் அறிவித்தன.

இரண்டு முசுலீம் இளைஞர்களைத் தவிர குஜராத் முழுவதும் ஒருவர் கூட பந்தையொட்டித் தடுப்புக் காவலில் கைது செய்யப்படவில்லை. இனப்படு கொலையை வெற்றிகரமாகச் செய்து முடிக்க அமைச்சர்கள் தத்தம் மாவட்டங் களுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

மாநில சுகாதார அமைச்சர் அசோக் பட், 1985 மதக்கலவரத்தில் கொலைக் குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளி. அசோக் பட்டும் இரு அமைச்சர்களும் அகம தாபாத் போலீசு கட்டுப்பாட்டு அறையில் அமர்ந்தபடி படுகொலையை வழிநடத் தினர்.

''அரசுக் குடியிருப்பு வளாகத்தி லேயே அமைச்சர்கள் ஆர்.எஸ்.எஸ். ஷாகா (பயிற்சி) நடத்துகின்றனர்; தலைமைச் செயலரோ நான் ஒரு ஆர்.எஸ்.எஸ்.காரன் என்று பகிரங்கமாக அறிவிக்கிறார். இவர்களிடம் வேறென்ன எதிர்பார்க்க முடியும்?'' என்று கேட்கிறார் முன்னாள் பரோடா போலீசு கமிசனர் ஜஸ்பால் சிங்.

கொலைகாரர்களைப் போலீசு வழிந டத்தியது; பத்திரிகையாளர்களை விரட்டி யடித்தது; படுகொலையைத் தடுக்க முயன்ற முசுலீம் இளைஞர்களைச் சுட்டுக் கொன்றது.

ஒருவரியில் சொல்வதென்றால், முசு லீம்களை உயிரோடு எரிப்பதை வேடிக்கை (மட்டும்) பார்த்த போலீசுகா ரர்களை நல்லவர்கள் என்று சொல்லலாம்.

ஏனென்றால் காவலர் குடியிருப்பி லேயே முசுலீம் போலீசார் தாக்கப்பட் டனர்; இசுலாமியர்களான 3 போலீசு அதி காரிகள் உயிருக்கு அஞ்சி கூடுதல் பாது காப்பு கேட்டனர். தனது குடும்பத்தினரின் உயிருக்கு ஆபத்து என்று கேள்விப்பட்ட ஒரு முசுலீம் போலீசு அதிகாரி போலீ சுக்குப் புகார் செய்ய அஞ்சி, தொண்டு நிறுவனங்களிடம் சொல்லி அவர்களை மீட்கக் கோரினார்.

இந்த இனப் படுகொலையில்



படிப்பகம்

www.padippakam.com

போலீசின் பங்கு என்ன என்பதை எரிக்கப்பட்ட மசூதி ஒன்றின் சுவரில் எழுதி வைத்துவிட்டுப் போனார்கள் இந்து மத வெறியர்கள். "ஏ அந்தர் கி பாத் ஹை - போலீசு ஹமாரே சாத் ஹை" (ரகசியம் ஒன்னு சொல்றேன் கேளு - போலீ செல்லாம் நம்ம ஆளு)

இதையே வேறு வார்த்தைகளில் சொன்னார் அகமதாபாத் போலீசு கமிசனர் பாண்டே: "போலீசுகாரனும் மனிதன்தானே!"

கும்பலாய்க் கற்பழிப்பது, உயிரோடு எரிப்பது, குழந்தைகளைத் துண்டு துண்டாய் வெட்டுவது போன்ற 'மனிதத் தன்மை வாய்ந்த நடவடிக்கைகளில்' காக்கி அரை நிஜார் அணிந்த ஆர்.எஸ்.எஸ். காலிகளும், முழு நிஜார் அணிந்த போலீசு காலிகளும் கூட்டாகத்தான் ஈடுபட்டார்கள் என்பதை இப்படி உறுதி செய்தார் கமிசனர்.

குஜராத் போலீசாரின் நடவடிக்கை அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்றும் கடும் நடவடிக்கைக்குரிய தென்றும் நாடெங்கும் கண்டனக் குரல்கள் எழுந்தன. உடனே 27 போலீசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்தார் முதல்வர் மோடி.

தானே முன்நின்று கலவரக் கும்பல் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, 400 முசுலீம் உயிர்களைக் காப்பாற்றிய பவநகர் மாவட்ட எஸ்.பி. ராகுல் சர்மாவிற்கு மாற்றல் உத்தரவு!

தர்காவிற்குள் புகுந்து தாக்கிய வி.எச்.பி. சிவசேனா தலைவர்களைக் கைது செய்து, மாநில உள்துறை அமைச்சரின் மிரட்டலுக்கு அஞ்சாமல் அவர்களை சிறையில் தள்ளிய கட்ச் மாவட்ட எஸ்.பி. விவேக் ஸ்ரீவத்ஸவா விற்கு மாற்றல் உத்தரவு!

இவர்களைப் போன்று சட்டப்படித் தம் கடமையைச் செய்ய முனைந்த அதிகாரிகள் 27 பேருக்கு ஒரே நாளில் மாற்றல் உத்தரவு!

"கடமையைச் செய்யத் தவறிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடு" என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கை இப்பொழுது "கடமையைச் செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்காதே" என்று தேய்ந்து விட்டது.

"பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட வேண்டிய பயங்கரவாதி குஜராத் மாநிலத்தின் உள்துறை அமைச்சர் தான்" என்று இந்து பத்திரிகைக்கு வாசகர் கடிதம் எழுதியிருக்கிறார் முன்னாள் டி.ஜி.பியான வி.ஆர். லட்சுமி நாராயணன்.

**குஜராத் மாநில அரசைக் கலைப்பது தங்கள் கொள்கைக்கு விரோதமானது என்கிறார் மார்க்சிஸ்டு தலைவர் சோம்நாத் சட்டர்ஜி. அரசியல் சட்டம் சிவபெருமானென்றால் மார்க்சிஸ்டுகள் அதன் சிறுத் தொண்ட நாயனார்கள்!**

நடைபெறுவது சட்டத்தின் ஆட்சி அல்ல, இந்து மதவெறிப் பயங்கரவாதிகளின் ஆட்சி என்பதற்கு இந்தப் போலீசு அதிகாரியின் கூற்று இன்னுமொரு சான்று.

●○●

ஒரு முன்னாள் கடற்படை அதிகாரியின் கூற்றையும், ஒரு முன்னாள் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியின் கூற்றையும், ஒரு முன்னாள் டி.ஜி.பி.யின் கூற்றையும் மேற்கோள் காட்டுவதனால் இது இந்து மதவெறி அரசு நடத்திய இனப்படுகொலை என்ற உண்மையை நாம் இவர்கள் கூறித்தான் புரிந்து கொள்கிறோம் என்று பொருளல்ல.

**பவநகர் எஸ்.பி. ராகுல் சர்மா - இந்து மதவெறியர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதற்காக மாற்றல் உத்தரவு.**



நாடாளுமன்றம், நீதிமன்றம் அதிகார வர்க்கம் ஆகியவற்றின் மீது நம்பிக்கை வைக்குமாறு இடையறாது மக்களுக்கு உபதேசிக்கும் இந்தப் பிரிவினர், உண்மை தீயாய்ச் சுடுகின்ற சில தருணங்களிலாவது 'ஆ'வென்று அலறுகிறார்களே அதை ஜனநாயக தேவதையின் பக்தர்களுக்குச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் எடுத்துக் கூறுகிறோம்.

இவர்கள் கூறியவற்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அதேநேரத்தில் எதிர்க்கட்சிகள் என்று தங்களை அழைத்துக் கொள்கிறார்களே, அவர்கள் குஜராத் படுகொலையைப் பற்றி என்ன கூறுகிறார்கள், மத்திய அரசிடம் என்ன கோருகிறார்கள் என்பதுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

"பாராளுமன்றத்தில் அமளி, ரகளை, ஒத்திவைப்பு" போன்ற நாடகங்கள் கிடக்கட்டும். குஜராத்தில் நடந்தது இனப்படுகொலை என்று காங்கிரசு கூறவில்லை. வரவிருக்கும் குஜராத் சட்டமன்றத் தேர்தலில் முசுலீம் வாக்குகள் எப்படியும் தனக்குத்தான் என்று உறுதியாகிவிட்டபடியால் அடக்கி வாசிப்பதன் மூலம் இந்து வாக்குகளையும் கணிசமாக அறுவடை செய்ய நினைக்கிறது காங்கிரசு.

விசுவ இந்து பரிசத்தைத் துவக்கி வைத்த இந்திரா காந்தி முதல் பாபர் மசூதி இடிப்பை முடித்துக் கொடுத்த நரசிம்ம ராவ் வரை பாரதீய ஜனதாவின் வளர்ச்சிக்கு காங்கிரசு ஆற்றிய தொண்டினைப் பற்றிய வரலாறு தெரிந்தவர்கள் காங்கிரசின் இந்த அணுகுமுறை பற்றி ஆச்சரியப்படமாட்டார்கள்.

மார்க்சிஸ்டுகளும், வலது கம்யூனிஸ்டுகளும் என்ன சொல்கிறார்கள்? குஜராத்தை நேரில் பார்வையிடச் சென்ற சர்வ கட்சிக் குழுவில் அங்கம் வகித்த ஏ.பி. பரதன் இவ்வாறு சொல்கிறார்.

"இது அரசு பயங்கரவாதமென்றும் இதில் இனநாசப் போக்கு தென்பட்ட தென்றும் குற்றம் சாட்டுவதற்கு இடமுண்டு." (ஜனசக்தி. 31.3.2002)

வெண்ணெய் வெட்டும் கத்திபோல சொற்களில் எவ்வளவு கூர்மை! இது இனப்படுகொலைதான் என்று பரதன் தீர்மானமாகச் சொல்ல வேண்டுமானால் இறந்தவர்களின் எண்ணிக்கையில் மேலும் சில பூச்சியங்கள் சேர வேண்டும் போலும்! இது அரசு பயங்கரவாதம்தான் என்று அவர் புரிந்துகொள்ள வேண்டுமானால் குஜராத் போலீசார் ஆர்.எஸ்.எஸ்.இன் அரைக்கால் சட்டையை அணிந்து வந்திருக்க வேண்டும் போலும்!



படிப்பகம்

www.padippakam.com

காங்கிரசு முதல் மார்க்சிஸ்டுகள் வரையிலான இந்த மதச் சார்பற்ற மாவீரர்கள் குஜராத் படுகொலை தொடர்பாக வைக்கும் கோரிக்கை இதுதான் - ''மோடியை மாற்று!''

மோடியை மாற்றி அந்த நாற்காலியில் வேறொரு கேடியை உட்கார வைத்தால்? அதுபற்றி இவர்களுக்குக் கவலையில்லை. மோடி ஏன் ராஜினாமா செய்ய வேண்டும் என்பதற்கு இவர்கள் கூறும் காரணத்திலிருந்தே அதைத் தெரிந்து கொள்ளலாம்.

''நெருக்கடிக்கு ஆளாகும் ஒரு மாநிலத்தை ஆளுவதற்குத் தகுதியில்லாத ஆசாமியாக மோடியைக் காண முடிகிறது... (மோடி ராஜினாமா செய்தால்தான்) குஜராத் மக்களிடையே நம்பிக்கை மீளும்'' (ஜனசக்தி, 31.3.2002)

முதல்வர் நாற்காலியில் அமர்ந்து கொண்டு திட்டமிட்டு ஒரு இனப்படுகொலையை நடத்திக் கொண்டிருக்கும் கிரிமினலைப் பற்றி, தூக்கிலிடப்பட வேண்டிய குற்றவாளியைப் பற்றி பரதனின் குற்றச்சாட்டு ''அவர் நிர்வாகம் தெரியாத நபர்'' என்பதுதான். எவ்வளவு கடுமையான குற்றச்சாட்டு!

மோடி ராஜினாமா செய்தால்தான் பாரதீய ஜனதா அரசின் மீது மக்களுக்கு நம்பிக்கை மீளுமாம்! பாரதீய ஜனதா அரசின் மீது நம்பிக்கை வைத்திருப்பவர்கள் ஆர்.எஸ்.எஸ். காலிகளும், இந்து மதவெறியின் ஆதரவாளர்களும் மட்டும்தான். பாதிக்கப்பட்ட முசுலீம் மக்கள் மட்டுமல்ல, கொஞ்சம் மனிதாபிமானமும் நேர்மையுள்ளமும் கொண்ட யாரும் அந்த அரசை நம்பவில்லை.

மக்களுக்கு பாரதீய ஜனதா அரசின் மீது நம்பிக்கை ஏற்படுத்தும் வேலைக்காகத்தான் பரதன் குஜராத் சென்றிருக்கிறா ரென்றால், அவர் 'கம்யூனிஸ்டு' கட்சித் தலைவரா அல்லது பாரதீய ஜனதாவின் மேலிடப் பார்வையாளரா?

''மோடியைத் தண்டிக்க வேண்டும் என்ற கோரிக்கையை எதிர்க்கட்சிகள் கூட எழுப்ப மறுக்கின்றனவே'' என்று சாடுகிறார் வரலாற்றாய்வாளர் ரோமிலா தபார்.

மோடியைக் கைது செய்வது இருக்கட்டும். முதலில் கூரையேறிக் கோழி பிடிப்பார்களா கேட்போம். ''குஜராத் அரசைக் கலைத்து குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்தக் கோருவீர்களா'' என்று கேட்டால் ''எந்தவொரு மாநில அரசைக் கலைப்பதும் எங்கள் கொள்கைக்கு எதிரானது'' என்கிறார் மார்க்சிஸ்டு எம்.பி. சோம்நாத் சாட்டர்ஜி.

என்ன கொள்கை? இனப்படுகொலை நடத்தும் மாநில அரசின் உரிமையைப் பாதுகாக்கும் கொள்கை! அரசியல் சட்டம் குஜராத் முசுலீம் மக்களுக்கு வழங்கியுள்ள உயிர்வாழும் உரிமையை குஜராத்




**''மோடிக்குப் பதிலாக வேறொரு கேடி'' எதிர்க்கட்சிகளின் கோரிக்கை.**

அரசு பறித்து விட்டது. ஆனால் குஜராத் அரசின் உயிர் வாழும் உரிமையை எதிர்க் கட்சிகள் பாதுகாக்கின்றன!

''கலைக்கச் சொன்னால் வாஜ்பாயி கலைத்துவிடப் போகிறாரா, அல்லது கலைத்து விட்டால் இந்து மதவெறியின் ஆட்டம் குஜராத்தில் இல்லாமல் போய்விடுமா?'' என்று மார்க்சிஸ்டுகள் நம்மை மடக்கக் கூடும்.

பா.ஜ.க அரசு நாடெங்கும் குஜராத் போலப் படுகொலை நடத்தினாலும் மார்க்சிஸ்டுகள் செய்யப் போவது என்ன? தேசிய ஜனநாயக முன்னணியில் உள்ள 'மதச்சார்பற்ற' களவாணிகளிடம் மன்றாடி, அரசியல் சட்டத்தின் புனிதம் கெடாவண்ணம் ஆட்சியைக் கவிழ்க்க முயற்சி செய்வார்கள். அவ்வளவுதானே!

அரசியல் சட்டத்தின் புனிதம் குறித்த மாயை நமக்கு எள்ளளவும் இல்லை. ஆனால் அரசியல் சட்ட தேவதையின் கருவறைக்குள் நின்று கொண்டு நரேந்திர மோடி சிறுநீர் கழிக்கும்போது, மார்க்சிஸ்டுகளும் மற்றவர்களும் சந்நிதியில் நின்று நம்மைக் கன்னத்தில் போட்டுக் கொள்ளச் சொல்கிறார்களே, அந்தக் கேலிக் கூத்தைத்தான் சுட்டிக் காட்டுகிறோம்.

சர்வதேச விசாரணை வேண்டுமென்கிறார் இராணுவ அதிகாரி; பொடாவில் கைது செய்யச் சொல்கிறார் போலீசு அதிகாரி; அரசியல் சட்டம் வெறும் காகிதம் என்கிறார் நீதிபதி. ஆனால் மாநில அரசின் உரிமை பற்றிக் கவலைப்படுகிறார்கள் மார்க்சிஸ்டுகள்!

பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசைக் கலைப்பது என்பது ஜனநாயக விரோதமென்றால், படுகொலை செய்யப்படும் சிறுபான்மை மக்கள் என்ன செய்வது? அடுத்த தேர்தல் வரை காத்திருப்பதா, அல்லது ஆர்.எஸ்.எஸ். அறிவுறுத்துவது போல, 'பெரும்பான்மையினரின்' நல்லெண்ணத்தைப் பெற முயல்வதா?

பெரும்பான்மை மக்களின் இறையாண்மையும் வாக்குரிமையும் அத்தனை புனிதமானவை என மார்க்சிஸ்டுகள் கருதும் பட்சத்தில் புனிதமற்ற துப்பாக்கிகளுடன் காசுமீரிலும், வடகிழக்கிலும் இராணுவம் ஏன் நிற்க வேண்டும்?

''புனிதமான இந்திய அரசியல் சட்டத்தின் நிழலில் இருக்க விரும்புகிறார்களா, அல்லது வெயிலில் நிற்க விரும்புகிறார்களா'' என அங்கே வாக்கெடுப்பு நடத்தலாமே! 356-வது சட்டப்பிரிவு ஆதிக்கத்தின் சின்னம் என்கிறார் சட்டர்ஜி; 303 துப்பாக்கி அன்பின் சின்னமா?

அரசியல் சட்டம் சிவபெருமானென்றால் மார்க்சிஸ்டுகள் அதன் சிறுத் தொண்ட நாயனார்கள். அரசியல் சட்டத்தை வாயளவில் ஏற்றுக் கொண்ட மோடி உள்ளிட்ட சிவனடியார்கள் யாரானாலும் அவர்களுக்கு முக்களைப் பிள்ளைக்கறியாகப் படைக்க இவர்கள் தயங்கியதேயில்லை.



படிப்பகம்

www.padippakam.com

''பாராளுமன்ற வழியிலும், பாராளுமன்றத்திற்கு அப்பாற்பட்ட வழிகளிலும்'' புரட்சி செய்யப் போவதாக இவர்கள் எழுதி நிறைவேற்றிய கட்சித் திட்டத்தை நம்பி நக்சல்பாரி கிராமத்தில் கிளர்ந்தெழுந்த விவசாயிகளையும், அவர்களுடன் அணிதிரண்ட ஆயிரக்கணக்கான இளைஞர்களையும் அரசியல் சட்டத்திற்குக் காவு கொடுத்து 'புனிதமான' நாடாளுமன்ற நாற்காலிகளை பத்திரப்படுத்திக் கொண்டார்கள்.

''அரசியல் சட்டமா - கட்சித் திட்டமா'' என்ற கேள்வி எழுந்தபோது அரசியல் சட்டமே என்று வாக்களித்தார்கள்.

ஆனால் பாரதீய ஜனதாவோ ''பாராளுமன்றத்திற்கு அப்பாற்பட்ட வழிகளின் மூலம் இந்து ராஷ்டிரத்தை நிறுவப் போவதாக'' தனது கட்சித் திட்டத்தில் எதுவும் குறிப்பிடவில்லையே தவிர அதைத்தான் செய்து கொண்டிருக்கிறது.

''இந்துக்கள் சூலம் ஏந்துவது மத உரிமை'' என்ற அரசியல் சட்ட உரிமையைப் பயன்படுத்தி, நாடெங்கும் பஜ்ரங் தள் குண்டர்களுக்கு லட்சக்கணக்கான சூலங்களை விநியோகித்திருக்கிறது ஆர்.எஸ்.எஸ்.

குத்திக் கொல்வதற்குப் பயன்படும் பிச்சுவாக் கத்தியையே மூன்று முனைகள் கொண்ட சூலம் போல தந்திரமாக வடிவமைத்திருக்கிறார்கள் பார்ப்பன இந்து மத வெறியர்கள்.

மார்க்சிஸ்டுகளோ ''குத்துவதைக் கண்டிக்கிறோம்; எனினும் கத்தியைப் பறிமுதல் செய்வது அரசியல் சட்டத்துக்கு எதிரானது - அது மூன்று முனைகள் கொண்டதாக இருக்கும் வரை!'' என்கிறார்கள். ''படுகொலையைக் கண்டிக்கிறோம்; எனினும் ஆட்சிக் கலைப்பு எங்கள் கொள்கைக்கு எதிரானது - அது தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாக இருக்கும் வரை'' என்று வாதாடுகிறார்கள். இத்தகைய வக்கீல்கள் இருக்கும் வரை வாஜ்பாயிக்கு என்ன கவலை?

இது இறையாண்மை என்ற சொல்லுக்குள் ஒளிந்து கொள்ளும் இனப்படுகொலை, அமைச்சர் வேடத்தில் உலவும் பயங்கரவாதி, நடைமுறைக்குப் பயன்படாத காகிதச் சட்டம் - என்று இராணுவ அதிகாரியும் போலீசு அதிகாரியும் நீதிபதியும் சொல்கிறார்கள்.

இவர்களென்ன, ஆளும் வர்க்கங்களே நேரில் வந்து, ''ஐயா நீங்கள் பூசிப்பது அரசியல் சட்டமல்ல, எங்கள் கழிப்பறைக் காகிதம்'' என்று தெளிவுபடுத்தினாலும் இவர்கள் விடப் போவதில்லை. என்ன செய்வது? வரலாறு அப்படி. புராணமும் அப்படித்தான்.

கடவுள் ஒரு அவதாரமெடுத்தால், அவரது கைத்தடியும் கூடவே அவதாரமெடுக்கவேண்டும். மகாவிஷ்ணு ராமனாக அவதாரமெடுத்தால், ஆதிசேடன் லட்சுமணனாக வந்து சேவை செய்ய வேண்டும்.

ஹிட்லர் அத்வானியாக அவதாரமெடுத்தால், ஹிட்லரின் ஜனநாயக உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த சமூக ஜனநாயகவாதிகள் சோம்நாத் சட்டர்ஜியாக அவதாரமெடுக்கிறார்கள்.

இவர்கள்தான் மதச் சார்பின்மையின் மாவீரர்களாம். இவர்களின் தலைமையில் இந்து மதவெறியை எதிர்த்து வீழ்த்த முடியும் என்று நம்புபவர்களுக்கு நாம் என்ன சொல்வது?

ஐயா, மண்குதிரையை நம்பி ஆற்றில் மூழ்கியவர்களைக் கேள்விப்பட்டிருக்கிறோம். மண் கழுதையை நம்பி ஆற்றில் இறங்கியதாகப் புதிய கதையை உருவாக்காதீர்கள்.

மதவெறியின் புகலிடம் பாராளுமன்றமென்றால் மதச்சார்பின்மையின் பிறப்பிடம் புரட்சி - அதை நாடுங்கள்.

மதவெறியின் ஆயுதம் திரிசூலமென்றால், மதச்சார்பின்மையின் ஆயுதம் எது - அதைத் தேடுங்கள்!

● மருதையன்

## ஒரு கிழட்டு வெறிநாயின் வாக்குமூலம்!

***''ஆம். நாங்கள் திட்டமிட்டுத்தான் கலவரம் நடத்தினோம்'' என்று பகிரங்கமாகப் பேட்டி கொடுத்திருக்கிறார் ஒரு விசுவ இந்து பரிசத் தலைவர். பேராசிரியர் கேசவ்ராம் காசிராம் சாஸ்திரி வி.இ.பரிசத்தின் குஜராத் மாநிலத் தலைவர். வயது 96. ரீடிஃப்.காம் என்ற இணைய இதழுக்கு மார்ச் 17-ஆம் தேதி அவர் கொடுத்த பதிவு செய்யப்பட்ட பேட்டியிலிருந்து:***

அகமதாபாத்தில் முசுலீம்களின் க்டைகள் கொள்ளையடிக்கப்பட்டதும், முசுலீம்களுக்கெதிரான வன்முறைகளும் இந்துக்களின் தன்னெழுச்சியான கோபத்தின் வெளிப்பாடு அல்ல; வி.இ.பரிசத் தயாரித்த பட்டியலின் அடிப்படையில் தான் நடந்தது என்று குற்றம் சாட்டுகிறார்களே?

*''பிப்ரவரி 28. காலையில்தான் உட்கார்ந்து பட்டியல் தயார் செய்தோம். முன்கூட்டியே தயாரிக்க முடியவில்லை.''*

ஏன் இப்படிச் செய்தீர்கள்?

*செய்துதான் தீரவேண்டும். செய்துதான் தீரவேண்டும். எங்களுக்கு விருப்பமில்லைதான். இருந்தாலும் ஆத்திரம் தாங்க முடியவில்லை. காமத்துக்கும் கோபத்துக்கும் கண்ணில்லையே. கலகம் செய்தவர்களெல்லாம் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த ஹிந்து பையன்கள்தான்...*

*அகிம்சையெல்லாம் சாஸ்திரத்தில் படிக்க நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் கோத்ரா சம்பவம் காரணமாக பையன்கள் ஆத்திரமாகி விட்டார்கள்.... வாக்ரி சாதிக்காரர்கள் (ஒரு தாழ்த்தப்பட்ட சாதி) - அவர்களுக்கு கோத்ராவில் செத்தது யாரென்று தெரியுமா? ஆனால் அவர்கள்தான் அற்புதமாக வேலை செய்திருக்கிறார்கள்.*

நீங்கள் ஒரு அறிஞர். இலக்கியவாதி. அப்பாவிகளை உயிருடன் எரித்துக் கொல்வதை உங்களால் எப்படி மன்னிக்க முடிகிறது?

*நமக்குப் பிடிக்கவில்லையென்றாலும் இளைஞர்கள் செய்து விடுகிறார்களே. என் மகள் தவறு செய்தால் நான் கண்டிப்பேனா... அப்படித்தான்.*

கொலை, கொள்ளைக் குற்றங்களில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்காக விசுவ இந்து பரிசத் 50 வழக்கறிஞர்கள் கொண்ட குழுவை நியமித்திருக்கிறது. ''வழக்கறிஞர்கள் யாரும் காசு வாங்க மாட்டார்கள். ஏனென்றால் எல்லோரும் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தில் நம்பிக்கை கொண்டவர்கள்'' என்றார் சாஸ்திரி.

***இது மறுக்க முடியாத, ஆதாரபூர்வமான பேட்டி. இந்தக் கிழட்டு வெறிநாயை எந்தச் சட்டம் தண்டிக்கப் போகிறது? இத்தகைய மதவெறி நாய்களைச் சுட்டுப் பொசுக்குவதைத் தவிர வேறென்ன தீர்வு?***



படிப்பகம்

www.padippakam.com

# நாட்டுப்புறக் கலையல்ல ஒடுக்கப்பட்ட கலை!

**ஒன்பதாமாண்டு தமிழ் மக்கள் இசைவிழாக் கருத்தரங்கில் முனைவர் மு. இராமசாமி (தலைவர், நாடகத்துறை, தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சை) அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்.**

இன்றைய நிகழ்ச்சிக்காக இங்கே 'நாட்டுப்புறக் கலைஞர்கள், நாட்டுப்புறக் கலை ஆகியவற்றின் அவல நிலை' பற்றிப் பேச ஒப்புக் கொண்ட அந்தச் சமயத்தில் என்னுடைய சிந்தனை ஒரு மாதிரி இருந்தது. பின், நேரடியாக அந்தப் பிரச்சினை தொடர்பான கருத்துக்களைத் தேடத் தொடங்கியபொழுது, அது வேறொரு முகம் காட்டியது போல இருந்தது.

நான் ஏறக்குறைய கடந்த 25,27 ஆண்டுகளாக நாட்டுப்புறக் கலைஞர்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறேன். நாட்டுப்புறவியல் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றியிருக்கிறேன். அதெல்லாம் கல்வி சார்ந்த அக்கறைகளோடு நான் பணியாற்றிய ஒன்று. நாட்டுப்புறவியல் என்றுதான் நான் அதை ஏற்றுக் கொண்டிருந்தேன்.

ஆனால் நாட்டுப்புறக் கலைகள் என்ற தலைப்பிலே கட்டுரை தயாரிக்கத் தொடங்கிய பொழுது இந்தச் சொல் பொருத்தமானது தானா என்ற ஐயமே வர ஆரம்பித்து விட்டது. அதாவது, ஒரு கலை என்கின்ற முறையில் நாட்டுப்புறக் கலையும், கலைஞர்களும், அதேபோல செவ்வியல் கலைகளும் கலைஞர்களும் சமமாக நடத்தப்படுவதில்லை என்ற மொழிதலில் உண்மை இருக்கிறது என்றாலும் கூட, நாட்டுப்புறக் கலையையும், செவ்வியல்கலையையும் எதிரெதிராக நிறுத்த வேண்டிய அவசியம் எங்கிருந்து வருகிறது என்பது கேள்வியாகிறது. வசதிக்காக அல்லது பழக்கப்பட்டுப் போனதால் ஒரு புரிதலுக்காக நாட்டுப்புறக் கலை, நாட்டுப்புறக் கலைஞர்கள் என்றே இப்பொழுது நாம் வைத்துக் கொள்வோம்.

**நாட்டுப்புறக்கலை என்றழைப்பது சரிதானா?**

இங்குள்ள நிறுவனங்கள் எல்லாமே கலை நிகழ்ச்சிகளைப் பிரிக்கும்போது ஒன்று கிளாசிக்கல் (செவ்வியல்), இன்னொன்று ஃபோக் (நாட்டுப்புறவியல்) என்று பிரிக்கிறார்கள். கிளாசிக்கல், ஃபோக் என்னும் ஆங்கிலச் சொற்களின் பயன்பாடு – கிளாசிக்கல் என்றால் செம்மாந்த சிலர், ஃபோக் என்றால் மக்கள் திரள் என்னும் - இந்த இருமை எதிர்வை முன் வைக்கிறது.

வெப்பம் - குளிர்ச்சி, வெளிச்சம் - இருட்டு, மேடு - பள்ளம், நீர் - நெருப்பு, உள்ளூர் - வெளியூர் போல, நாட்டுப்புறக் கலையின் எதிர்வாக அமையும் சாமர்த்தியம் நகர்ப்புறக் கலை என்பதற்கு மட்டும்தான் உண்டு. நாட்டுப்புறக் கலை என்று சொன்னால் அதற்கு எதிர்வாக இருக்கக் கூடியது நகர்ப்புறக் கலை என்பதுதான் இருக்கக் கூடுமே ஒழிய, செவ்வியல் கலை என்பது எப்படி வருகிறது என்கிற ஒரு ஐயப்பாடு எழுகிறது.

ஆயின் நாட்டுப்புறக் கலைக்கு எதிராகச் செவ்வியல் கலை எங்கிருந்து வந்தது? செவ்வியல் கலை என்றால் என்ன சொல்கிறார்கள்?

ரொம்பப் பழமையானது, ரோமானிய இலத்தீன் போன்ற தொன்மையான மொழிகளின் வளமான இலக்கியங்கள் என்கிற மாதிரி உள்ளதெல்லாம் செவ்வியல் இலக்கியங்கள் அல்லது செவ்வியல் கலைகள் என்று சொல்லப்படுகின்றன. ஒன்று: அதில் உள்ள பழமை; மிகத் தொன்மையானது; இரண்டாவது: அதில் இருக்கக்கூடிய இலக்கிய, இலக்கணப் பராம்பரியம். இவை இரண்டின் அடிப்படையிலேதான் நாம் செவ்வியல் என்பதைப் பார்க்கிறோம்.

**மேற்கத்திய மரபில் செவ்வியல்**

கடந்த சில காலமாக, தமிழையும், தொன்மொழிகளில் ஒன்றாக ஆக்க வேண்டும் என்ற குரல் இங்கே ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. இந்த நிலையில் வரலாற்றுத் தொடர்ச்சியும் இலக்கியப் பாரம்பரியமும் கொண்ட பண்டைய கிரேக்க, லத்தீன் கலைக்குரிய தன்மைகளைக் கொண்ட மிகச் சிறந்த முதல்தரமான படைப்பு செவ்வியல் படைப்பு என்பதாக நம் அகராதியும் அர்த்தம் கொள்கிறது. இது கிளாசிகஸ் (Classicus) என்ற லத்தீன் சொல்லிலிருந்து உருவானது என்று சொல்லப்படுகிறது.

கிளாசிக்கஸுக்குள் வரக்கூடியவர்கள் - செல்வர்கள் அல்லது ஒரு சிலருக்கான கலை இலக்கியத்தைப் படைப்பவர்களாக இருக்க வேண்டும். புராலடேரியஸ் என்று பார்த்தால் வரி செலுத்த வகையற்ற நிலையில் இருக்கக் கூடிய



ரெட்டிப் பாளையம் வீரசோழக் குழுவினரின் தப்பாட்டம்.



படிப்பகம்

www.padippakam.com

சாதாரண, சாமானிய மக்கள். இரண்டும் தெளிவாகப் பிரிவுபட்டு நிற்கிறது.

செவ்வியலார் என்பதும் சாமானியர் - உழைக்கும் மக்கள் என்பதும் வர்க்க வேறுபாட்டின் விழுமியங்கள் உருவாக்கிய சொல்லாக்கம். ஆக, செவ்வியல் கலைக்கு எதிரானதாக மக்கள் கலை - உழைக்கும் மக்கள் கலை உள்ளது. மக்கள் கலை என்ற சொல் - நாட்டுப்புறக் கலை என்பதை விடவும் கூடுதல் பொருத்தப்பாடு உடையதாகும்.

ஆனால் இதே விசயம் ஒரு லத்தீன் அல்லது ரோமில் உருவாக்கிய அர்த்தம் வர்க்கத் தன்மையைக் குறிக்கும் போது, நம் இந்திய மரபில் அது வேறு வகையான பண்பாட்டை, ஆதிக்கத்தின் கீழ், மூடுதிரையின் கீழ் மூழ்கிக் கிடக்கும் பண்பாட்டை - நமக்குக் காட்டுகிறது. அது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

**இந்திய மரபு:**
**கதை - பிரம்மா**
**இயக்கம் - பரதமுனி**

நமது இந்திய மரபில் தொன்மையானதாக நம் கையில் கிடைத்திருப்பது நாட்டிய வேதம் என்று அழைக்கப்படும் நாட்டிய சாத்திரம்.

பரத முனி என்பவர்தான் நாட்டிய சாத்திரத்தை எழுதியவர். அதனால்தான் 'சதிர்' என்ற ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரிடமிருந்த ஆட்டக்கலையானது உயர்சாதி அல்லது உயர்த்திக் கொண்ட சாதியினரிடம் போகும்போது அது பரத நாட்டியமாக மாறுகிறது. ஆனால் அதன் அடிப்படை 'சதிர்'.

'பரத நாட்டிய சாத்திரத்துக்கு வருவோம். பிரம்மனுடைய ஆணைப்படி பரதர் நாட்டிய சாத்திரம் பண்ணுகிறார். அவருடைய சொற்கள் மூலமாகவே நாம் சிலவற்றைப் பார்க்கலாம்:

பரதரின் சீடர்கள் அவரை அணுகி 'நாட்டியவேதம் எதனால் உருவாயிற்று?' என்று கேட்டார்கள். ஒரு காலத்தில் 'எல்லா வர்ணத்தாருக்கும் பொருத்தமான இன்னொரு வேதத்தை உருவாக்கித் தரவேண்டும்' என்று இந்திரன் தலைமையில் கடவுளர்கள் பிரம்மாவைக் கேட்டார்களாம், அதற்காக பிரம்மா உருவாக்கியதுதான் நாட்டிய வேதம்.

இன்றைக்கு நாம் சொல்கிறோம் - நாடகம், சினிமா, தொலைக்காட்சி ஆகியவை சுலபமாக மக்களை ஈர்த்துக் கருத்துக்களைச் சொல்லும் சக்தி படைத்தவை என்கிறோம். இதேபோல அன்று வேதங்களின் கருத்தை - வர்ணாசிரமத்தை எல்லா மக்களும் உணர வைக்க நாட்டியம் பிறந்தது; மக்களை மயக்கத்தில் ஆழ்த்தி வைத்தது.

தான் எழுதிய வேதத்தை நடிப்பதற்கு பரதரைப் பணிக்கிறான் பிரமன்.

**நாடகத்தில் அசுரர் ரகளை!**

பயிற்சிக்குப் பிறகு பரதர் பிரமனிடம் வந்து அவனுடைய ஆணை என்ன என்று கேட்கிறார். இந்திரன் அசுரர்களைக் கொன்ற நிகழ்ச்சிதான் கதை. எனவே, இந்திரனுடைய கொடி விழாவில் அந்நாடகத்தை நடத்தச் சொல்கிறான் பிரமன்.

முனைவர் மு. இராமசாமி



**மேலை மரபில் வர்க்க வேறுபாட்டில் வந்த செவ்வியல் - மக்களியல் என்ற கருத்தாக்கம், இந்திய மரபில் மேலோர் - கீழோர் தேவர் - அசுரர் எனும் இருமை எதிர்வில் இயங்கிக் கொண்டிருக்கிறது.**

'அசுரர்களை தேவர்கள் எப்படி வென்றார்கள்?' என்பதையே நாடகமாக்கி வெளியுலகுக்குக் காட்டுவது அவர்களின் அழகான திட்டம். நாடகம், திறந்தவெளி நாடகம்தான்.

ஆனால் நாடகத்தை ஓரத்திலிருந்து பார்த்துவிட்ட அசுரர்கள் தங்களைக் கேவலப்படுத்தும், இழிவுபடுத்தும் நாடகத்தை அனுமதிக்கக் கூடாது என்று இன உணர்வால் உந்தப்பட்டு உள்ளே புகுந்து கலாட்டா செய்கிறார்கள்.

**'வருணப் பிரிவு' பாதுகாப்பு!**

இப்பிரச்சினை மறுபடி பிரமனுக்குப் போகிறது - பரதர் மூலமாக. பிரம்மா விஸ்வகர்மாவை அழைத்து திறந்த வெளி அரங்கிற்குப் பதிலாக மூடப்பட்ட அரங்கத்தைக் கட்டச் சொல்கிறான். அரக்கர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவர்கள் செய்த திட்டம் அது.

அரங்கம் கட்டப்பட்டதும், உள் அரங்கின் பல பகுதிகளைக் காப்பாற்றும் பொறுப்பை பல கடவுளர்க்குப் பிரிக்கிறான் பிரம்மா. உள்ளே பல தூண்கள். அது வர்ணங்களின் எல்லைகளைக் குறிப்பதற்காக. தூண்களுக்கு வேறு வேறு வண்ணங்கள்; பல வர்ணத்தாருக்கும் வெவ்வேறு இருக்கைகள்; அவற்றைக் காப்பாற்றத் தனி கடவுளர்கள். சூத்திரர்களுக்கான சாமியாகக் குறிப்பிடப்படும் யமனுக்கு அரங்கின் கதவைத் திறந்துவிடும் காவலாளிவேலை. இந்திரன் மேடை அருகே பொருள்களைக் காப்பாற்ற; அசுரர்கள் அடிக்க வந்தால் அடித்துச் சாய்க்கும் வேலை மின்னலுக்கு.

மேடையின் மையத்தில் பிரமன். இன்றைக்கும் திரைக்குப் பின்னால் பிரமனுக்கு முதல் பூஜை போடுகிறார்கள். அதாவது, அன்று பிரமன் போட்ட நாடகத்தின் தொடர்ச்சியாக இன்றும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

**அசுரர் கலையே மக்கள் கலை**

மேற்கத்திய மரபில் வர்க்க வேறுபாட்டில் நுழைந்த செவ்வியல் - மக்களியல் என்ற கருத்தாக்கம், இந்திய மரபில் மேலானோர், கீழானோர் எனும் கருத்து மரபை உருவாக்கியிருக்கும் தேவர் - அசுரர் என்னும் இருமை எதிர்வில் இயங்கிக் கொண்டிருக்கிறது. தேவர் வழிவந்த கலை செவ்வியல் கலை; அசுரர் வழிவந்த கலை மக்களியல் கலை. உயர்வு - தாழ்வு எனும் வருணாசிரம வழி எப்படிச் செயல்படுகிறதென்பதையும் பார்த்தோம்.

அதாவது மக்கள் கலை - கீழானது, செவ்வியல் கலை - மேலானது என்ற சிந்தனை மரபு இந்திய மரபில் இருக்கிறது. இதை இன்னொரு புதிய மொழியில் சொன்னால் உயர்த்திக் கொண்ட - தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட என்ற எதிர்வுகளின் இயைபு என்று கொள்ளலாம்.

ஆந்திர தலித் மக்களுக்கு நாடகம்



படிப்பகம்

www.padippakam.com

பற்றிச் சொல்லச் சென்றிருந்தோம். சாதி பற்றி விளக்கியபோது உயர்த்தப்பட்ட சாதி, தாழ்த்தப்பட்ட சாதி என்று சொன்னேன். ஒரு கூலி விவசாயி - தலித் இளைஞர் - அப்படிச் சொல்வது தவறு, அது 'உயர்த்திக்கிட்ட சாதி' என்று சொல்லச் சொன்னார். அவர் விழிப் போடு சொன்ன வார்த்தைகளின் அர்த்தம் ரொம்ப முக்கியமானது; அதை நான் இங்கே பயன்படுத்துகிறேன்.

**இழிந்தோர் கூத்து**

தமிழகத்தின் வரலாற்றுக்கு வருவோம். சிலப்பதிகாரம் - அரங் கேற்றுக் காதையில் ''இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து'' என்பதற்கு அடி யார்க்கு நல்லார் உரை எழுதுகையில் ''அவைதாம் சாந்திக் கூத்தும், வினோதக் கூத்தும் என்ப'' என்று விள்க்குகிறார்.

வினோதக் கூத்தை விளக்குகையில், ''எழுவகைக் கூத்தும் இழிகுலத்தோர் ஆட வகுத்தனன் அகத்தியன்தானே'' என்று சொல்கிறார். ஆக, இருவகைக் கூத்து என்பது - சாந்திக்கூத்து - உயர்ந்தோர் கூத்து; வினோதக் கூத்து - இழிந்தோர் கூத்து.

ம.க.இ.க-வின் கலைக்குழுவினர்



கலை மட்டுமா? எழுத்து மட்டும் என்ன, தமிழ் இலக்கண நூலான 'பன்னிரு பாட்டியலில்' சொற்களின் உரிமை வர்ணாசிரம அடிப்படையில் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அப்ப இரண்டுதான் இருக்கிறது. ஒன்று: இழிந்த குலத்தவர் ஆடுவது; இன்னொன்று; உயர்ந்த குலத்தோர், அதாவது உயர்த்திக்கிட்ட குலத்தோர் ஆடுவது.

நாம நாட்டுப்புறம், கீட்டுப்புறம்கிறதெல்லாம் - நாம ஒரு நாகரீகமான தன்மையோட சரி எதுக்குன்னு சொல்லிக் கிட்டிருக்கக்கூடிய ஒரு சொல்லாக்கமாகத்தான் பயன்படுத்துகிறோம்.

உண்மையானது - பரதத்தின் அடிப்படையில்தான் இங்குள்ள கலைகள் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டன என்கிற செய்தி. கருத்தியல் ரீதியான இப்பண்பாட்டு ஆக்கிரமிப்புக்குப் பலியாகிப் போயிருக்கிற நம் சூழலைக் கோடி காட்டுவதற்காக இதைச் சொல்கிறேன்.

அதாவது உயர்த்திக்கிட்ட குலத்தோன் அல்லது இழிக்கப்பட்ட குலத்தோன் என்று தரத்தின் அடிப்படையிலேயே கலைகள் அளவிடப்பட்டுள்ளன.

**நவரசங்கள் நமக்கில்லை**

இன்னொன்று: அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் - ஒன்பாண் சுவையும், அறமுதல் நான்கும் கொண்டது நாடகம் என்கிறார். ஆனால் இதற்குள்ளே மேலும் நுழைந்து பார்த்தால் மேலும் அதிர்ச்சிகள் இருக்கின்றன.

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, சமநிலை - இவையே ஒன்பாண் சுவை.

அறம், பொருள், இன்பம், வீடு இவையே நால்வகை ஒழுக்கம்.

இவை அத்தனையும் முதல் உரிமை கொடுப்பது அந்தணர்க்கே; வீடு இல்லாத பிற மூன்றும், இளிவரல் - சமநிலை ஒழிந்த 7 சுவைகளும் அரசனுக்கு;

அறம், பொருள் இரண்டும், சமநிலை ஒழிந்த 8 சுவைகளும் வணிகர்க்கு;

சூத்திரர்க்கு உரியது அங்கம். அதாவது, அறம் மட்டுமே அவனுக்கு உண்டு - திருடாதே, பொய் பேசாதே, இதைப் பண்ணு, அதை மட்டும் செய் போன்ற அறக்கட்டளைகளை ஏற்கவேண்டிய இடத்தில் சூத்திரன் வைக்கப்பட்டான்.

**எழுத்திலும் சாதி**

ஆக, வருணாசிரமத்தின் அடிப்படையிலேயே இங்கு கலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. கலை மட்டுமா - எழுத்து மட்டும் என்ன? 'ழ' பேச வராதவரை இன்று கேலி செய்கிறார்கள் - நம்மில் பெரும்பாலோர்க்கு 'ழ'கரம் வராது; 'ள'தான் வரும்.

இதில் வேடிக்கையும், வேதனையும், அடக்குமுறையும் கலந்த ஒரு விசயம் இருக்கிறது.

தமிழ் இலக்கண நூலான 'பன்னிரு பாட்டியலில்' சொற்களின் உரிமை வர்ணாசிரம அடிப்படையில் பல கடவுளர்க்குப் பிரிக்கப்பட்டுச் சொல்லப்படுகிறது.

உயிர் எழுத்து பனிரெண்டும், மெய் எழுத்துக்கள் ஆறும் ஆக 18 எழுத்துக்கள் அந்தணர்க்கு உரியது.

மற்றவருக்கான எழுத்துக்கள் எல்லாம் அந்தணர்க்குரிய உயிர் எழுத்தோடு கூடினால்தான் உயிர் பெற முடியும். அதாவது மற்றைய சாதிக்காரர்கள் எல்லாம் உயிரற்ற உடம்பை மட்டுமே, சவத்தை மட்டுமே வைத்துக் கொண்டிருக்கவும், சூத்திர எழுத்துக்கள் (ழ்,ள்) உயிரோடு சேராத நிலையில் - நன்றியறிதலுள்ள நாயின் குரைப் பொலியோடேயே நின்று போகும் விதத்திலேயே உள்ளது. இது நம்மீது - மொழியில் கூட - போர்த்தப்பட்டுள்ள பித்தலாட்டம்.

அந்த ழ்,ள் இரண்டும் எமன் படைத்தவை. ஏன் என்றால் சூத்திரச் சாதியை



படிப்பகம்

www.padippakam.com

எமன்தான் படைத்தானாம். தமிழுக்குச் சிறப்பு எழுத்து 'ழ'ங்கிறோம்; அது நமக்கான எழுத்து, நம்மகிட்டே இருக்கேன்னு பெருமைப்பட்டுக்கலாம்; அவ்வளவுதான்.

**நாட்டுப்புறக் கலையல்ல ஒடுக்கப்பட்ட கலை!**

இந்த நிலையில், நாட்டுப்புறக் கலை - கலைஞர்கள் என்பதெல்லாம் கவைக்கு உதவாது. இவற்றில் வரலாறு மறைக்கப்பட்டிருக்கிறது; தலைகுனிவு பூசி மெழுகப்பட்டிருக்கிறது; சூழ்ச்சி வெளித்தெரியவில்லை; நாகரீகமாக செவ்வியல் கலை; மக்களியல் கலை என்று கூறலாம். அதையே வன்மத்துடன், அவமானத்தை அடையாளப்படுத்தும் விதத்தில் சொல்வதெனில் உயர்த்திக்கிட்ட கலை, தாழ்த்தப்பட்ட - ஒடுக்கப்பட்ட கலை என்று கூறலாம்.

இந்த தமிழ் மக்கள் இசைவிழாவில் ஒரு வாய்ப்பு கிடைத்தமையால்தான் இந்த மாதிரி ஒரு சிந்தனை கூட வந்ததுங்கிறதால இந்தக் கலைவிழாவுக்கும், உங்களுக்கும்தான் அதற்கான நன்றியை நான் தெரிவிக்க நினைக்கிறேன்.

**செவ்வியலுக்கு சன்மானம் நாட்டுப்புறத்துக்குக் கூலி!**

நான் நிறைய சொல்லலாம். சிறிய உதாரணங்கள் மட்டும் சொல்கிறேன். நாங்கள் சென்னையில் தூரதர்சனில் 'சாப விமோசனம்' என்ற நாடகம் நடத்தப் போயிருந்தோம். 3 நாள் ஒத்திகை - 30 பேர் நாடகக் குழு. சாப்பாடு, ஒத்திகைக்குப் போக வர செலவு, ஊர் போக வர செலவு. கடைசியில் ரூ. 10,000 கொடுத்தார்கள். 3 நாள் ஒத்திகை வரையிலேயே ரூ. 8,000 செலவு ஆயிட்டுது. போக்குவரத்துச் செலவுக்கு வேண்டுமே என்றேன். "இல்லீங்க, உங்க அயிட்டத்த ஃபோக் (Folk) அயிட்டம்னு முடிவு பண்ணிட்டாங்க அதான்" என்றார்கள் அவர்கள்.

ஒடுக்கப்பட்ட கலைக்கு ரூ. 10,000-க்கு மேல் கிடையாது. எனக்கு - என் 'அயிட்டம்' நாடகம் தாங்கிறதுக்காகச் சண்டை போடுவதா, ஃபோக் என்றால் என்ன குறைச்சல்னு கேட்பதா என்றிருந்தது. நாட்டுப்புறக் கலைஞர்களும் - கலைஞர்கள் தானே, மனுசன்தானே?

இதை விளக்க இன்னொரு விசயம் சொல்றேன். நாங்க 'பாரத தர்மம்'னு ஒரு நாடகம் போட்டோம். பஞ்சபாண்டவர்கள் அரக்கு மாளிகையிலேருந்து தப்பிப் போவது, துரியோதனன் கொளுத்தி விடுவான் என்று அஞ்சி தங்களைப் போலவே அஞ்சு பேர், ஒரு பெண்உட்பட பஞ்சமரிலிருந்து ஆள் ஏற்பாடு செய்து விருந்து வைத்துத் தங்க வைத்து விட்டு (எவ்வளவு கொடுமை?) தாங்கள் தப்பித்து விடுகிறார்கள். துரியோதனன் மாளிகையை எரித்துவிட்டு ஆறுபேரும் எரிக்கப்பட்டார்கள் என்று முடிவு செய்கிறான்.

நாடகத்தில் நாங்கள் அந்தக் கேள்வியை எழுப்பினோம். தருமன், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன், அம்மா குந்தி ஆறு பேரும் தப்பிச்சுட்டாங்க என்று சந்தோசப்பட்ட எந்த மனிதனும், அவர்களுக்குப் பதிலாக ஒடுக்கப்பட்ட ஆறு பேர் உயிரைக் கொடுத்தார்களே, அவர்களை எரித்து விட்டார்களே என்று கேள்வி கேட்டதே கிடையாது.



'நாகரிக' சமுதாயத்தின் இரட்டை வேடத்தைக் கேலி செய்யும் குறவன் குறத்தி ஆட்டம்.

அவங்க உயிர் சாதாரணம் - எல்லாமே உயர்ந்தோர் மாட்டே; மேலோர் மாட்டே.

ஆக, அவங்களும் ரத்தத்தை வியர்வையாச் சிந்தித்தான் கலைஞர்களா இருக்காங்க. துண்டை எடுத்து முண்டாசு கட்டியிருந்தா ஃபோக்; அதே துண்டையே அங்கவஸ்திரம் போலத் தொங்க விட்டிருந்தா செவ்வியல். வித்தியாசம் ரொம்பத் தெளிவா இருக்கு; இதுல எந்த மாய்மாலமும் கிடையாது.

ஐயா, உங்களுக்கு அந்த பிளைட்டுல டிக்கட் புக் பண்ணி இருக்கேன்னு டிக்கட் நேரில் வரும் - அது செவ்வியல் ஆசாமிகளுக்கு;

எத்தனைப் பேர் போறீங்க, எப்படியாவது 'பிடிச்சு' ஏதாவது ஏறிப் போய்ச் சேர்ந்துருங்க. நான் அங்கவந்து பாத்துக்கிடறேன் - இது ஃபோக் - மக்கள் கலைஞர்களுக்கு.

இயக்குனர் சம்மதித்தால் ரூ. 50,000/- வரை செவ்வியலுக்குக் கொடுக்கலாம். நம்ம தப்பாட்டக் கலைஞர் ரங்கராஜனுக்கு ஒருநாள் கூலி ரூ. 250. சாப்பாடு, போக்குவரத்து எல்லாம் அதில்தான். தகுதி, தராதரம் எல்லாம் இயக்குனர் முடிவு பண்ணுவாங்க.

நமது கலைஞர்கள் ரூ. 200-க்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள். இதில் கலைமாமணிப் பட்டம் கையூட்டு கொடுத்தாவது வாங்க அலைகிறார்கள். ஏன்னு சொன்னா அதனால கூடுதலா 'சன்மானம்', 'கூலி' கிடைக்குமாம். இது இப்பதான் தெரியுது. அவலம் - எவ்வளவு அவலம்? - இதைத்தான் நான் சொல்ல வந்தது.

நாட்டுப்புறக் கலை என்பதை விடவும், ஒடுக்கப்பட்ட கலை என்று சொல்லும்போது தாங்கள் ஒடுக்கப்பட்ட கலைஞர்கள் என்பதை உணர்ந்து, அந்த உணர்வோடு ஒடுக்கப்பட்ட கலைஞர்கள் ஒன்றிணைந்து செயல்பட்டால் மிகப் பெரிய உன்னதங்களை அவர்களால் படைக்க முடியும்.

கலைகளுள் எந்தக் கலையும் உயர்வு - தாழ்வு என்றிருக்க முடியாது. ஏன் என்றால், மனிதர்களில் உயர்வு - தாழ்வு என்று கிடையாது. வள்ளுவன் 'பிறப் பொக்கும்' என்று சொன்னதை உள்ளபடியே நாம் நம்புகிறவர்கள். அந்தத் தன்மானத்தைக் காக்க வேண்டிய பொறுப்பு அந்தக் கலைஞர்களிடம் உள்ளது.

www.padippakam.com

## தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதிகள்:

# வதந்தியும் வாழ்க்கையும்

**தொலைக்காட்சிப் பெண்களிடம் கடிஜோக் சொல்லிச் சிரிக்கும் மாணவர்கள், ஆனந்த விகடனின் பக்கங்களில் அரட்டையடிக்கும் மாணவர்கள், கலரு, பிகரு என்று குமுதம், குங்குமம் இதழ்களில் அலையும் மாணவர்கள்... இதுதான் மாணவர் உலகம் என்று நீங்கள் கருதிக் கொண்டிருந்தால், இதோ இன்னொரு உலகத்தைக் காட்டுகிறோம், பாருங்கள்.**

''எண்ணூரில் ஒரு தனியார் கம்பெனியில் இரவு நேரப் பணியிலிருந்த இளைஞர் புல்டோசரில் சிக்கி சாவு.'' அவர் ஒரு மாணவர். அதுவும் ஒரு தாழ்த்தப்பட்ட மாணவர். ''விடுதியில் தங்கிப் படித்துக் கொண்டே இரவு நேரத்தில் தொடர்ந்து கூலி வேலைக்குப் போனதால் தூக்கக் கலக்கத்தில் இந்த விபத்து நேரிட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.''

இப்படி ஒரு பெட்டிச் செய்தி தினமணியில் ஒரு ஓரத்தில் ஒதுங்கிக் கிடந்தது. கூலி உழைப்பின் கொடுமையிலிருந்து தனது மகனாவது தப்பி வாழவேண்டும் என்று கிராமப்புறப் பெற்றோர்களால் நகரத்திற்குப் படிக்க அனுப்பி வைக்கப்பட்ட அந்த இளைஞன் திரும்பவும் கூலி உழைப்பின் கொடுமையில் சிக்கிச் சாவதற்கு யார் காரணம்? படிக்கும் பருவத்திலேயே கூலி வேலைக்குப் போகவேண்டிய அவசியம் ஏன் வந்தது?

இப்படிப்பட்ட கேள்வி அலைகள் சமுதாயத்தின் எந்தப் பக்கமும் எழும்பாமல் வழக்கம்போல கேள்விக்கிடமின்றி அந்தத் தாழ்த்தப்பட்ட மாணவனின் பிணம் தினசரியின் ஓரத்தில் ஒதுங்கிக்கிடந்தது.

### தனிச் சலுகை தவறு தனிக்குவளை சரியா?

ஆனால் சமுதாயத்தின் இன்னொரு பக்கத்திலிருந்து அலை அலையாக எழுகின்றன கேள்விகள். ''என்ன சார் நியாயம் இது? எங்கப் போனாலும் அவுங்களுக்குத்தான் சலுகை, இலவசப் பள்ளிக்கூடம், படிப்புக்கு காசு இல்ல, இலவச ஆஸ்டலு, ஸ்டூடண்ட்டுன்னா எல்லாரும் ஸ்டூடண்டுதான்சார்; அவங்களுக்கு மட்டும் என்னா சார் தனிச் சலுகை?''

கேள்வி கேட்கும் இந்த ஜனநாயகவாதிகள்தான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆண்டாண்டு காலமாகத் தனிச் சுடுகாடு, தனிக் குடியிருப்பு, தனிக் கிணறு, தனிக் குவளை என்ற பாகுபாட்டை முறையாகக் கடைபிடிப்பதை மவுனமாக ஆமோதிக்கும் யோக்கியவான்கள். அதாவது எல்லாவிதமான இழிவுகளையும் அவர்கள் தனியே அனுபவிக்க வேண்டும். ஒருசில உரிமைகளை அரசு சலுகைகளாக அவர்கள் அனுபவிக்க நேரிட்டால் மட்டும், 'ஐயோ போச்சு பொதுவில் வை' என்கிறது ஆதிக்கச் சாதியின் இரட்டை அளவுகோல். ஆதிக்கச் சாதியின் மனோபாவம் மட்டுமல்ல, ஐ.எம்.எஃப், உலகவங்கித் திருடர்களும், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளை மூடச் சொல்லி நெருக்குகிறார்கள்.

கல்லூரி அளவில் படிக்கும் தாழ்த்தப்பட்ட மாணவர்களின் நிலைமைதான் என்ன? அரசு சலுகைகளின் மயில் பீலிகளுக்கு இடையே அவர்கள் உல்லாசமாக மல்லாந்து கிடக்கிறார்களா? இல்லை.

படிப்பதற்கான செலவை ஈடுகட்ட, முதுகலைக் கணக்கியல் படிப்பவர் உயரமான கட்டிடங்களின் சாரத்தில் சுண்ணாம்பு மட்டையுடன் தொங்குகிறார்; கம்ப்யூட்டர் கல்வியை எப்படியாவது முடித்து விடவேண்டும் என்ற மன உறுதியுடன் கம்பி வளைக்கிறார் ஒருவர்; இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பின்தங்கிவிட்ட தனது தலைமுறையில் தானாவது படித்து முன்னேறிவிட வேண்டும் என்ற வேகத்துடன் ஒரு அரசியல் கட்சியின் ஊர்வலத்தில் ஒருநாள் கூலிக்காக நரம்பு புடைக்க கத்திக் கொண்டு போகிறார் ஒரு பொருளாதார மாணவர். இவைகள் ஏதோ தமிழ்ச் சினிமாவின் திடுக்கிடும் காட்சிகளல்ல, தாழ்த்தப்பட்ட மாணவர்களின் தினசரி வாழ்க்கை.

### பட்டம் எம்.காம் பட்டப்பெயர் மேஸ்திரி

திண்டிவனம் வேப்பேரி கிராமத்திலிருந்து சென்னைக்கு வந்து ஹாஸ்டலில் தங்கி வணிகவியல் (M.Com., M.phil.) படிக்கும் ஜானகிராமன் என்ற மாணவருக்கு விடுதியில் சக மாணவர்கள் வைத்திருக்கும் பெயர் 'மேஸ்திரி'. எம்.காம்., எம்.ஃபில் படித்தவருக்கு அது என்ன பெயர் 'மேஸ்திரி'? அவரே சொல்கிறார்:

''எங்க அப்பா அம்மா, வயல்ல கூலி வேலை செய்றாங்க; இங்க தர்ற ஸ்காலர்ஷிப் பணத்த வெச்சிகிட்டு நான் முதுகலை படிப்பெல்லாம் படிக்க முடியாது; அதனால வெளில எங்காவது வேலைக்குப் போக வேண்டிய கட்டாயம் இருக்கு. பார்ட்டிகளில் சப்ளையர் வேலைக்குப் போயி கேட்ரிங் ஏஜெண்ட் தொடர்பு கிடைச்சது. இங்குள்ள எல்லாருக்குமே இதான் நெலமை. ஏஜெண்ட் எத்தன ஆள் கேக்குறானோ அத்தன ஸ்டூடண்ட்களை நான் இங்கேயிருந்து அழைச்சிகிட்டுப் போவேன். அதனால எனக்கு மேஸ்திரின்னு பேரு ஆயிடிச்சு.''

''எங்களுக்கு தலைக்கு நூறு ரூவான்னு பேசி வாங்கிகிட்டு ஏஜெண்ட் நாப்பது ரூவாதான் தருவான். எங்ககிட்ட பஸ்பாஸ் இருக்கிறதுனால போக்குவரத்து மிச்சம். இந்த வேலைக்காக நாங்கள் கொஞ்சம் செலவும் பண்ணிக்க வேண்டியிருக்கு. பார்ட்டிகளில் சப்ளை பண்ண



''படிப்புச் செலவுக்கே பார்ட்டிகளில் சப்ளையர் வேலை பார்க்க வேண்டியிருக்கு. படிச்சு முடிச்ச பிறகும் சப்ளையர் வேலைக்கே போயிடுவேனோன்னு பயமாயிருக்கு.''

ஜானகிராமன், (எம்.காம், எம்.ஃபில)

www.padippakam.com

கட்டாயம் கருப்பு பேண்ட், வெள்ளை சட்டை, ஷு, டை, எடுக்கனும். அதனாலதான் சார் இங்க பாத்தீங்கன்னா கருப்பு பேண்ட், வெள்ளை சட்டை எல்லார்கிட்டேயும் இருக்கும்.''

''கூட காசு கேட்டா 'ஒங்க மொகர கட்டைக்கு இன்னும் கேக்குதா?'ன்னு ஏஜெண்டு மொறைப்பான். இந்த மேக்கப்பெல்லாம் இல்லாம போனா பார்ட்டிக்கு வர்றவன் நம்மள ஒரு மாதிரியா வெறிப்பான். 'என்னய்யா இந்த மாதிரி ஆளெல்லாம் வெச்சிருக்கிற'ன்னு சமயத்துல வேலைக்கே வத்தி வெச்சிடுவாங்க'' என்றார்.

குறுக்கே பேசிய ஒரு மாணவர் ''கருப்பு பேண்ட் வெள்ளை சட்டை போட்ட 'லா' காலேஜ் ஸ்டூடண்ட்ஸ பார்த்தாகூட நம்மள மாதிரி கேட்டரிங் ஆளுங்களா இருப்பாங்களோன்னு எங்களுக்கு தோணும் சார்,'' என்றார் சிரிப்புடன்.

சிரிக்கக் கூடிய விசயமா இது? நம்மைப் போல மாணவர்கள் என்று மகிழ வேண்டிய பருவத்தில், நம்மைப் போலவே அத்துக் கூலிகளா என்று எண்ணும் அளவுக்கு அந்த மாணவர்களை ஆட்டிப் படைக்கும் சோகம் இதயத்தைப் பிசைகிறது.

''படிச்சு முடிச்சா வேலை கெடைக்குமான்னு சந்தேகமா இருக்கு. படிக்கிறதுக்கே இப்படி கேட்டரிங் வேலைக்குப் போக வேண்டியிருக்கு. படிச்ச பெறகும் இதே வேலைக்கு போய்டுவேனோன்னு பயமா இருக்கு சார்'' என்று அரசு சலுகையின் பின்னணியை அச்சத்துடன் விவரிக்கிறார் ஜானகிராமன்.

**பகலில் பட்டதாரி**
**இரவில் சுண்டல் வியாபாரி**

''அரசாங்கம் தான் ஸ்காலர்ஷிப் தருதே'' என்று கேட்பவர்களுக்குத் தன்னுடைய நிலமையைச் சொல்கிறார் ஜெயங்கொண்டம் பாப்பாகுடியிலிருந்து சென்னைக்கு வந்து விடுதியில் தங்கி முதுகலை வேதியல் படிக்கும் வெங்கடேஷ் என்ற மாணவர்.

''எனக்கு வருசத்துக்கு இருபதாயிரம் படிப்புச் செலவுக்கு தேவை, ஆனா கவர்மெண்ட் தர்றதோ நாலாயிரம் ரூபாதான். ஒரு சப்ஜெக்ட்டுக்கு ஜெராக்ஸ் எடுக்கவே நானூத்தம்பது ரூபா ஆகுது. எனக்கு பத்து சப்ஜெக்ட். எப்படி காசு பத்தும்?''

''நான் தங்கியிருக்கிறது ராயபுரம். காலேஜ் ராயபேட்டை. ப்ராக்டிகல் கிளாஸ் அட்டண்ட் பண்ணனும்னா சாயந்தரம் நாலரை மணி வரைக்கும் இருந்தாகணும்; இடையில சாப்பிட வரமுடியாம வயித்துல அல்சரே வந்திடுச்சு.''

''உதவித் தொகை, சலுகை எல்லாம் சும்மா ஒப்புக்குத்தாங்க. தெனம் நாலரை மணிக்கு கிளாஸ் முடிச்சுட்டு அதுக்கு பெறகு பீச்சுல போயி சுண்டல் வியாபாரம் பிளாஸ்டிக் பொருள் விக்கிறேன், வேல செய்யிற ஆளுகிட்ட படிப்பயும் சொல்ல முடியாது. ராத்திரி பத்து மணிக்குதான் ஹாஸ்டலுக்கு வருவேன். இதுல கெடைக்கிற நாப்பது அம்பது வெச்சிதான் மேக்கொண்டு படிச்சிகிட்டிருக்கிறேன்.''

''ஊருல அப்பா, அம்மாவுக்கு கூலி வேலை, அங்கேயிருந்தும் பணம் அனுப்ப முடியாது. காலேஜ் லைஃப், ஜாலியெல்லாம் எங்களுக்கு ஏது?'' கேள்வியுடன் விடைபெற்றவர் அவசரமாக பீச்சுக்கு கிளம்பினார் - காற்று வாங்குவதற்காக அல்ல.

**ஸ்காலர்ஷிப் எனும் மோசடி**

''தாழ்த்தப்பட்டவங்களுக்கு மட்டுந்தான் சலுகைங்கிறதே பொய் சார், 'பி.சி.'லயும் ஏழைங்களுக்கு ஹாஸ்டல், பஸ்பாஸ் எல்லாம் ஃப்ரீ; ஸ்காலர்ஷிப்ல மட்டுந்தான் எங்களுக்கு ஒரு அறுநூறு ரூவா அதிகம்'' என்கிறார் ஒருவர்.

''ஸ்காலர்ஷிப் கூட ஒழுங்கான நேரத்துல தர்றதில்ல. கல்வி ஆண்டு முடிஞ்சப் புறம்தான் தர்றாங்க'' நிறைய மாணவர்களுக்கு உதவித்தொகை எவ்வளவு, என்ன என்ற விவரமே தெரியாது.

''போன வருசம் படிச்சவங்களக் கேட்டுதான் இதெல்லாம் தெரிஞ்சிக்கிறது. வைஷ்ணவா கல்லூரியில் வெறும் இருநூறு ரூவாதான் தந்தாங்க, அடிக்கடி நான் போயி கேட்டதால எனக்கு மட்டும் ஆயிரம் ரூவா தந்தாங்க. இதுலயும் மோசடி நடக்குது'' என்று வேதனைப்படுகிறார் எம்.ஏ. பொருளாதாரம் படிக்கும் பி.ஜி. பன்னீர் செல்வம் என்ற மாணவர். தாழ்த்தப்பட்டவர்களிடம் தீட்டு பார்க்கும் வைஷ்ணவ 'அவாள்களு'க்கு தாழ்த்தப்பட்ட மாணவர்களின் ஸ்காலர்ஷிப்பில் கை வைத்தால் மட்டும் தீட்டுப்படாது போலிருக்கிறது!

இது தவிர முதுகலை ஆராய்ச்சி

''ஆளுக்கு 100 ரூபாய்னு சொல்லி 'இருவர்' பட ஷூட்டிங்குக்கு கூப்பிட்டுப் போய், வெறும் தயிர் சோறத் தந்து ஏமாத்திட்டாங்க.''



ஆர். கோவிந்தசாமி, (எம்.எஸ்.சி)

''அரியர்ஸ் விழுந்தா ஸ்காலர்ஷிப் கிடையாது. அரியர்ஸ் விழாத அளவு படிக்கனும்னா ஸ்காலர்ஷிப் பத்தாது''



பி.ஜி. பன்னீர்செல்வம், (எம்.ஏ.)



''பஸ்களை தனியாராக்குறான். எங்களுக்கு இலவச பாஸ் கிடைக்குமா? அது பி.சி. மாணவனையுந் தான் பாதிக்கும். எங்களுக்கு மட்டுந்தான் சலுகைங்கிறதல்லாம் சும்மாங்க.''

செல்வராஜ், (எம்.ஏ)

படிக்கும் மாணவர்கள்; கைடு சொல்லும் வீட்டு வேலைகள், தனிப்பட்ட வேலைகளைச் செய்யாவிட்டால் மார்க் வாங்குவது கடினம். ''ஒருமுறை ஹாஸ்டலுக்கு விண்ணப்பிச்சுட்டு அத விசாரிக்கப் போயி வார்டனுக்கு வீட்டு வேலை செஞ்சேன். அப்பவும் விடுதி கெடைக்கல; கைடு காய்கறி வாங்கிட்டு வரச் சொன்னா செய்யணும் ஏதோ எங்களப் பாத்தா எளக்காரம். இப்படி எல்லாருக்குமே நாங்க 'பை தூக்கியா' இருக்க வேண்டியிருக்கு சார்'' என்று வேதனைப் படுகிறார் செல்வராஜ் என்ற மாணவர்.

இலவச உழைப்பு, அடிமை வேலை, போன்ற பண்ணையடிமை முறைகள் பட்டப்படிப்பு என்ற பந்தாவான வடிவத்தில் தொடர்கின்றன. இவர்களுக்கு மட்டும் தனிச்சலுகையா என்று வேட்டை நாயாகப் புறப்படும் ஆதிக்க சாதி மனோபாவம், இந்தச் சுரண்டலைப் பார்த்து மட்டும் வாயைப் பொத்திக் கொள்கிறது.

**மணிரத்தினம் மாணவர்களை ஏய்த்த கதை**

மாணவர்களின் மீதான இந்தச் சுரண்டல், கல்வி வளாகத்தோடு மட்டும் முடிந்து விடுவதில்லை. 'கலைச்சேவை' புரியும் சினிமா அயோக்கியர்களுக்கும் மாணவர் விடுதிகள் இலவச உழைப்பின் கூடாரங்களாகி விட்டதை ஆர்.கோவிந்தசாமி என்ற மாணவர் சொந்த அனுபவத்திலேயே சொல்கிறார்:

''அரசியல் கூட்டங்களுக்கு காசு வாங்கிகிட்டு கூட்டம் சேர்க்கப் போனா, அடிதடியாவுதுன்னுதான் சினிமா 'சூட்டிங்குல' கூட்டமா நிக்குற சீன்க்ளுக்கு அம்பது ருவா கெடக்கிதுன்னு போவோம். ஒருமுறை மணிரத்தினத்தின் இருவர் படத்துக்காக சென்னை மாணவர் விடுதிகளிலிருந்து மட்டும் மூவாயிரம் பேரை அழச்சிகிட்டுப் போனாங்க. தலைக்கு நூறு ருவா தர்றதா சொன்னாங்க.''

''படத்துல எம்.ஜி.ஆர். மீட்டிங்ல பேசுறது மாதிரியும் அத கேக்க பெரிய கூட்டம் நிக்குற மாதிரியும் சீனு; எம்.ஜி.ஆர். பேசுறப்ப எல்லோரும் கைதட்டணும்னு சொன்னாங்க. சூட்டிங் முடிஞ்ச பெறகு காசு வாங்கலான்னு ஏஜெண்ட்ட தேடிப்பாத்தா, ஒரு தயிர் சோறு மட்டும் குடுத்துட்டு தலைமறைவாயிட்டான். மணிரத்தினத்துக்கிட்ட போய் கேட்டதுக்கு ''எனக்கு தெரியாது. நான் குடுத்துட்டேன்னு'' அந்த ஆளு கைய விரிச்சுட்டான்.''

''அப்புறம் ஸ்டூடன்டெல்லாம் கடுப்பாகி, சினிமா வேன், காரெல்லாம் அடிச்சி நொறுக்கிட்டு மவுண்ட் ரோடு போலீஸ் ஸ்டேசன்ல கூட புகார் கொடுத்தோம் ஒண்ணும் நடக்கல'' என்றார் எரிச்சலுடன்.

நிஜ எம்.ஜி.யாரை நம்பித்தான் மக்கள் கெட்டார்கள் என்றால், மணிரத்தினத்தின் நிழல் எம்.ஜி.யாரும் மக்களை விட்டு வைக்கவில்லை. இந்த லட்சணத்தில் இருவர் படத்துக்கு விமர்சனம் எழுதிய குமுதம், ஆனந்தவிகடன் வகையறாக்கள் குறிப்பிட்ட அந்தக் காட்சியில் கிராஃபிக்சே இல்லாமல் இவ்வளவு பெரிய கூட்டத்தைக் காட்டிய மணிரத்தினத்தின் சமத்தைப் பாராட்டுகின்றனர். சம்பளமே இல்லாமல் சூட்டிங் எடுக்கும் திறமை மணிரத்தினத்திடம் இருக்கும் போது கிராஃபிக்சே இல்லாமல் ஏன் கலக்கமாட்டார்?

**வயிற்றைக் கழுவ கள்ள ஓட்டு, அரிவாள் வெட்டு**

அரசியல் கூட்டத்திற்குப் போன செல்வராஜ் என்ற மாணவரின் அனுபவம் வேறு மாதிரி. ''ஒருமுறை ஒரு அரசியல் கூட்டத்திற்கு மயிலாப்பூர் பக்கம் கூட்டமா நடந்து போனோம். மேடைக்கு கூட்டத்துக்கு போறோம்னுதான் நெனச்சிகிட்டு போய்கிட்டிருந்தோம். திடீர்னு முன்னாடி வரிசைல ஒருத்தர், 'கலைஞர் வாழ்க' என்று கத்தியவுடன் தான் இப்ப ஊர்வலத்துல போய்கிட்டிருக்கோமுன்னு எங்களுக்குத் தெரிஞ்சது. இப்படி போற ஒவ்வொரு மாணவனுக்கும் இது தவறுன்னு தெரியுது. இருந்தும் வயித்துக்காக இதச் செய்றோம்'' என்கிறார் எம்.ஏ. பொருளாதாரம் படிக்கிற அவர்.

திருத்தணிக்கு கள்ள ஓட்டுப் போடுறதுக்கு போனதுல அடி, அரிவாவெட்டு வரைக்கும் வாங்குனதெல்லாம் உண்டு என்கிறார் முதுகலை தமிழ் படிக்கும் மூர்த்தி வளவன். மாணவர்களை மாணவர்களாக வாழவிடாத இந்த ஓட்டுப் பொறுக்கிகள்தான் அவர்கள் தங்களது நியாயமான கோரிக்கைகளுக்காக வீதியில் வந்து போராடும்போது ''மாணவர்களுக்கு எதுக்கு அரசியல்'' என்று கேட்கிறார்கள். ஆனால் ஓட்டச் சுரண்டும் இவர்களின் மோசடி அரசியலுக்கு மட்டும் மாணவர்கள் மலிவு விலையில் வேண்டும்.



காலை 9.30 இலிருந்து 4.30 வரை கல்லூரி. மாலை 5 முதல் இரவு 10 வரை பீச்சில் சுண்டல் வியாபாரம். கல்லூரி வாழ்க்கை, ஜாலியெல்லாம் எங்களுக்கு ஏது?

வெங்கடேஷ், (எம்.எஸ்.சி.)



படிப்பகம்

www.padippakam.com

''நம்மளப் போல நம்ம புள்ள அடிமை வேல செய்யக்கூடாது நாலெ முத்து படிச்சி டவுன்ல போயி முன்னேறணும்'' என்ற பெற்றோர்களின் கனவு பொய்த்துப் போகிறது. சேலம் மாவட்டம் தர்மபுரம் கிராமத்திலிருந்து சென்னை வந்து படிக்கும் ஏ. அறிவழகன் (எம்.எஸ்சி விலங்கியல்) என்ற மாணவர் அனுபவபூர்வமாகவே இதை உணர்ந்து சொல்கிறார்:

''நான் யு.ஜி. ஊர்ல முடிச்சிட்டு லயோலா பி.ஜி. சேர்லாம்னு வந்தேன். எல்லா தேர்வுலெயும் பாஸ் பண்ணேன். நேர்முகத் தேர்வில் சப்ஜெக்ட் தெரிஞ்சா மட்டும் போதாது, நல்லா உங்களுக்கு இங்கிலீசு பேச வரலன்னு சொல்லிட்டு சேர்க்கல. ஒரு வருசம் வேஸ்ட் ஆய்ட்டுது. ஊருல போயி தீவனம் வித்தேன். இந்தக் கல்வி முறை எங்கள வாழ வெக்குமுன்னு நம்பிக்கையில்ல.''

இந்தக் கல்வி முறை மட்டுமல்ல, இந்தச் சமூக அமைப்பு முறையே தங்களை வாழ வைக்காது என்பதை மாணவர்கள் உணர ஆரம்பித்து விட்டனர்.

''ஊர்ல ஏர் ஓட்டுனா எழுபது ரூபா கூலி. இங்க நாப்பது ரூபாதான் சம்பளம். ஊர்ல வயல்வேல் செய்யறவங்க எங்களப் பாத்துக் கிண்டல் பண்றாங்க. நல்ல சோத்துக்காகவே கேட்டரிங் சப்ளை போறோம்'' என்கிறார் ஜானகிராமன்.

**பட்டப்படிப்பு சாதிவெறியை ஒழிக்குமா?**

''இனிமே அடிச்சித் திருத்துனாதான் சார் நெலம மாறும்'' என்கிறார் விலங்கியல் படிக்கும் அறிவழகன். எஸ்.ஸி மட்டுமா சார் பி.சி.யிலயுந்தான் ஏழை இருக்கான். ஆனா பி.ஜி. அளவுக்கு படிக்கிறவங்களே ஜாதி பாக்குறது வருத்தமாயிருக்கு. நான் படிக்கிற எடத்துல சில பி.சி. ஸ்டூடண்டுக வேணும்னே என் சப்ஜெக்ட்க்குள்ள புத்தகத்த லைப்ரரிலேர்ந்து எடுத்துக்கிட்டு சீக்கிரம் வைக்கிறதில்ல; தன் சாதிக்கார ஆளுங்ககிட்டே தேவையில்லன்னாலும் சும்மா வெச்சுக்கனு சொல்லி கொடுத்துர்றாங்க.''

''எங்க காலேஜ்ல ஒரு நாடகத்துல ஒரு பி.சி. ஸ்டூடண்ட் ஒரு தாழ்த்தப்பட்டவர் வேடத்துல நடிச்சாரு. பி.சில உள்ள சில பேரு 'போயும் போயும் ஏண்டா பறையன் வேசத்துல நடிச்சே'ன்னு சொல்லி அவர சாதி வெறியேத்துறாங்க. பி.சில நல்லவிதமா ஒரு சில பேரு இருக்காங்க. ஆனா அவங்களயும் சில பேரு ஜாதி வெறியச் சொல்லித் தூண்டி விடுறாங்க. பொதுவான நட்புங்குறதெல்லாம் முழுமையா இருக்குமுன்னு சொல்ல முடியாதுங்க.''

''சாதிக்காக அடுத்தவனுடைய நோட்சைப் பிடுங்குவதில் மட்டுமல்ல, தனது சொந்தப் பிள்ளைகளின் கல்வியைப் பிடுங்கவும் ஆதிக்க சாதியவாதிகள் தயங்குவதில்லை. ''எங்க ஊர் பக்கம் பி.சி. பொண்ணுங்க, படிக்கிற எடத்துல எஸ்.ஸி. ஆளுங்கள காதலிக்குதுங்குறதால பள்ளிக்கூடத்தோடயே படிப்ப நிறுத்திடுறாங்க'' ஆதிக்க சாதியாக இருந்தாலும் அவர்களுடைய கல்வி வாய்ப்பு தடுக்கப்படுவதைப் பார்த்து வருத்தப்பட்டுக் கண்டிக்கிறார் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த அறிவழகன்.

''பஸ்ஸ பிரைவேட்ல வுட்ப்போறான். விட்டுட்டான்னா எங்களுக்கு ஃப்ரீபாஸ் கெடைக்குமா? அது பி.சி. ஹாஸ்டல் ஸ்டூண்டையுந்தான் பாதிக்கும். எங்களுக்கு மட்டும் சலுகைங்கறதெல்லாம் சும்மா சார்'' என்கிறார் செல்வராசு.

தாழ்த்தப்பட்ட மாணவர்கள் சாதிய ரீதியான இழிவுகளைச் சந்தித்த போதும் எல்லா மாணவர்களுடைய கல்வி வேலை வாய்ப்புகளைப் பறித்தெடுப்பது அரசுதான் என்பதை உணர்ந்துள்ளார்கள். இதற்கு எதிரான போராட்டத்தில் சக மாணவர்களுடன் இணைந்து போராட இவர்களுக்கு சாதி உட்பட எதுவும் தடையாக இல்லை.

''தாழ்த்தப்பட்டவர்களுக்கான வாய்ப்புகளினால்தான் தங்களுடைய எல்லா வாய்ப்புகளுமே பறிபோய்விட்டது என்று வெறிக் கூச்சலிட்டு வாய்வழிப் பிரச்சாரம் செய்யும் ஆதிக்க சாதி வெறியர்களுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டிய பொறுப்பு தாழ்த்தப்பட்டோரல்லாத மற்ற மாணவர்களுக்கு இருக்கிறது. இது அவர்களது கடமை.

நேர்காணல் தொகுப்பு:
**துரை. சண்முகம்.**

(நன்றி: சென்னை இராயபுரம் முதுகலை பட்டதாரி விடுதி மாணவர்கள்.)

## ஆதி திராவிடர் விடுதியா? ஆர்.எஸ்.எஸ். முகாமா?

ஆலயங்களில் அன்னதானம் அறிவித்திருக்கும் ஜெயலலிதா அரசிடம், ஆதிதிராவிட மாணவர் விடுதிகளை நடத்தக் காசில்லையாம். எனவே இவற்றைத் தனியாருக்குத் தானம் செய்யத் திட்டம் போட்டிருக்கிறது. 1017 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளையும், 243 பழங்குடி மக்களுக்கான பள்ளிகளையும் ஆதி திராவிடர் நலத்துறையிடமிருந்து பிடுங்கி கல்வித் துறையிடமே ஒப்படைக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது. இந்தச் சதித்திட்டத்தின் முகங்கள் இரண்டு.

உலக வங்கியின் உத்தரவுப்படி கல்வி மற்றும் மக்கள் நலத் திட்டங்களுக்கான ஒதுக்கீட்டை வெட்டுவது என்ற அடிப்படையில் தாழ்த்தப்பட்டோர்க்கான நிதி ஒதுக்கீட்டையும் வெட்டுவது என்பது இதன் பொருளாதார முகம்.

மாணவர் விடுதிகளைத் தனியாருக்குக் கொடுப்பது என்ற பெயரில் தாழ்த்தப்பட்ட மாணவர்களை பார்ப்பனக் கும்பலின் தயவில், அவாளை அண்டி வாழும்படி விடுவது இதன் பண்பாட்டு முகம். தாழ்த்தப்பட்டோர் மதம் மாறுவதைத் தடுக்கும் பொருட்டும், அந்த மாணவர்களை மனிதர்களாக்கும் பொருட்டு இந்த விடுதிகளைத் தன்னிடம் ஒப்படைத்து விடும்படி கேட்டிருக்கிறார் சங்கராச்சாரி.

காஞ்சியில் சங்கரமடம் நடத்தும் சுயநிதிக் கல்லூரியில் காசையும் கறந்து கொண்டு பிராமணாளுக்குத் தனி விடுதியும் சூத்திராளுக்குத் தனிவிடுதியும் நடத்தும் இந்தப் பார்ப்பன நரிகள், ஆதி திராவிட மாணவர் விடுதியில் தலை நுழைத்தால் துவக்கத்திலேயே சிண்டை அறுத்து விடவேண்டும்.

அன்னதானம் - ஆன்மீக வகுப்பு என்ற பெயரில் ஆலயங்களில் நுழைவது, ஆதிதிராவிட மாணவர் விடுதியில் நுழைவது - ஆகிய இரண்டுக்கும் நோக்கம் ஒன்றுதான். ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த ஏழை மாணவர்களையும், தாழ்த்தப்பட்ட மாணவர்களையும் ஆர்.எஸ்.எஸ்.ஸின் அடியாள் படையாக மாற்றுவதுதான் அந்த நோக்கம்.

### 13 ரூபாய்க்கு 3 வேளைச் சோறு!

**நூறு மாணவர்கள் தங்கிப் படிக்கும் விடுதியின் அன்றாட உணவுச் செலவு ரூ. 1290/-. அரசு ஒதுக்கியது எவ்வளவு ரூபாய், அதில் அதிகாரிகள் 'ஒதுக்கியது' எவ்வளவு ரூபாய் என்பது தெரியாது. உணவின் தரத்துக்கு இதுவே ஆதாரம்.**



படிப்பகம்

www.padippakam.com

## ஊழல் நாயகி - காவியத் தலைவி

# தகவல் ஊடகப் பச்சோந்திகள்!

ஜெயா டி.வி.யின் சுதாங்கன், ரபி பெர்னார்டு ஆகிய மூத்த செய்தியாளர்கள் ஜெயலலிதாவைப் பேட்டி காண்பதாக அடிக்கடி ஜெயா டி.வியில் ஒளிபரப்புகிறார்கள்.

ஜெயலலிதா என்ன சொல்ல விரும்புகிறாரோ அவற்றை முதலில் தயாரித்துக் கொள்கிறார்கள். முன்கூட்டித் தயாரிக்கப்பட்ட அந்தக் கருத்துக்குப் பொருத்தமான கேள்விகள் தயாரிக்கப்படுகின்றன. அப்புறம் இருவரும் உட்கார்ந்து ஜெயலலிதாவிடம் தண்டனிடாத குறையாக, விசுவாசம் - பணிவு நிறைந்த குரலில் கேள்விகள் கேட்கிறார்கள். பிறகு மேடைப் பேச்சுப் பாணியில், முகபாவனைகளைத் தகுந்தாற்போன்று மாற்றி மாற்றி ஜெயலலிதா பதில் கூறுகிறார். ஜெயலலிதா கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு, செய்தியாளர் கேள்வி கேட்பதையும், ஜெயலலிதா பதில் கூறுவதையும் தனித்தனியே ஒலி-ஒளிப் பதிவு செய்து, வெட்டி ஒட்டி ஒளிபரப்புவதும் கூட நடக்கிறது. இதற்காகக் கூட ஒத்திகை நடக்கிறதா என்பது தெரியவில்லை.

ஜெயா டி.வி.யில் ஜெயலலிதா - ரபி பெர்னார்டு பாணியிலான பேட்டியைப் போலவே, ஜெயலலிதா - செய்தியாளர் சந்திப்புகள் கடந்த ஓராண்டாக நடத்தப்படுகின்றன: அரசியல் ரீதியில் ஜெயலலிதாவுக்கு சிறு நெருடல் ஏற்படுத்திவிடும் என்கிற வகையிலான கேள்விகள் கூட கவனமாகத் தவிர்க்கப்படுகின்றன. அவருடைய மனமோ, முகமோ கோணாத கேள்விகள், குறிப்பாக ஜெயலலிதா என்ன சொல்ல விரும்புகிறாரோ அதற்குத் தகுந்தாற் போன்ற கேள்விகள் மட்டுமே கேட்கப்படுகின்றன. ஜெயலலிதாவிற்கு சாதகமாகவும், அவரது அரசியல் எதிரிகளுக்கு பாதகமாகவும் அமையும் பதிலை எதிர்பார்த்துக் கேள்விகள் வைக்கப்படுகின்றன.

இந்தக் கருத்தை ஜெயலலிதாவின் ஆலோசகரான சோ. ராமசாமியின் ''துக்ளக்'' பத்திரிக்கையே எழுதியுள்ளது. இந்தக் கருத்து கூட ஜெயலலிதாவுக்கு பாதகமாக அமைந்து விடக் கூடாது என்பதற்காக கருணாநிதியைச் சந்திக்கும் போது கூட இப்படித்தான் பத்திரிக்கையாளர்கள் நடந்து கொள்கிறார்கள் என்கிறது ''துக்ளக்''.

ஆனால், பத்திரிக்கையாளர்கள் சந்திப்பிலேயே, வானொளிப் படப்பிடிப்புக் கருவியின் முன்பாகவே சன் தொலைக்காட்சி நிருபரை மிரட்டும் பாணியில் ஜெயலலிதா நடந்து கொண்டதன் மூலம் பத்திரிக்கையாளர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவர் எடுத்துக் காட்டினார்.

அப்புறம் முன்னாள் அமைச்சர் பொன்முடியோடு விழுப்புரம் உணவுக் கிடங்குக்குப் போய் செய்தி சேகரித்த சன் தொலைக்காட்சி நிருபர் சுரேஷ் கைது வழக்கு, அதைக் கண்டித்த பத்திரிக்கையாளர்கள் மீது கோட்டை முன்பு தடியடி, கருணாநிதி கைது சம்பவத்தின் போது நடந்த தாக்குதல், அந்த கைது - அத்துமீறலைக் கண்டித்து தி.மு.க. நடத்திய பேரணியின்போது செய்தியாளர்கள் மீது நடத்திய தாக்குதல் ஆகியவை மூலம் களத்தில் நிற்கும் பத்திரிக்கையாளர்களுக்குப் பாடம் கற்பிக்கப்பட்டது.

இந்தச் சம்பவங்களை விசாரிக்கப் புகுந்த அனைத்திந்திய பத்திரிக்கையாளர்கள் அமைப்பின் விசாரணைக் குழு, தாக்குதல் நடத்திய ஜெயலலிதா அரசைக் கண்டிக்கவோ, நடவடிக்கை எடுக்கவோ செய்யவில்லை. அதைவிட வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதுபோல, பத்திரிக்கையாளர்களின் பொறுப்பு, மிகையான ஈடுபாடு காட்டுவது ஆகியவற்றுக்காக பத்திரிக்கையாளர்கள் கண்டித்து அறிவுறுத்தப்பட்டனர்.

இத்தகைய தாக்குதல், மிரட்டல்கள், கண்டனங்களோடு விசுவாசமான பத்திரிக்கையாளர்களைத் தெரிவு செய்து வீட்டு வசதி போன்ற சலுகைகள் வீசப்பட்டன. இவற்றோடு களப் பத்திரிக்கையாளர்கள் ஜெயலலிதா விசுவாசிகளாகிப் போனார்கள்.

> **ஜெயலலிதாவுக்குச் சிறு நெருடல் ஏற்படுத்தும் கேள்விகள் கூடத் தவிர்க்கப்படுகின்றன. அவர் என்ன சொல்ல விரும்புகிறாரோ அதற்குத் தகுந்த கேள்விகள் மட்டுமே கேட்கப்படுகின்றன.**

மேலை நாடுகளில், மேட்டுக்குடியினரது களிவெறியாட்டங்களின்போது அடையாளம் தெரியக்கூடாது என்பதற்காக பொம்மை முகமூடிகளைப் போட்டுக் கொள்வதுண்டு. இங்கே ஜெயலலிதா முன்பு தோன்றும் பத்திரிக்கையாளர்கள் எல்லோரும் சுதாங்கன்,. ரபி பெர்னார்டு ஆகிய இருவரின் பொம்மை முகமூடிகளை அணிந்து கொண்டு செல்கிறார்கள்.

எதிரே இருப்பவர்கள் எல்லோரும் சுதாங்கன், ரபி பெர்னார்டு போலத் தோன்றுவது ஜெயலலிதாவுக்கே சலிப்புத் தட்டிவிடாதா?

இல்லை. அப்படி இருப்பதைத்தான் ஜெயலலிதா விரும்புகிறார். ''ஜெயலலிதா - சசிகலா பேரவை துவக்கியது எங்கள் எதிரிகளின் சதி'', ''சென்னை சேப்பாக்கம் கருணாநிதியின் எம்.எல்.ஏ. அலுவலகத்தைத் 'தாக்கியவர்கள், தி.மு.க.வினர்தான்'', ''தஞ்சையில் நேரடி கொள்முதல் நிலையங்களைத் திறக்கக் கோரிப் போராடுபவர்கள் நெல் வியாபாரத் தரகர்கள்தான்'' ''சென்னை மேயர் பதவிப் பறிப்பில் அரசியல் நோக்கம் எதுவும் கிடையாது'' என்பன போன்ற செய்திகளை நம்புவதற்கும் பரப்புவதற்கும் சுதாங்கன்கள், ரபி பெர்னார்டுகள்தான் தேவையென்று ஜெயலலிதா எண்ணியிருக்கலாம்!

களச் செய்தியாளர்கள்தாம் இப்படி என்றால், செய்தி ஊடக முதலாளிகள் - பதிப்பகத்தார், ஆசிரியர்கள் எப்படியிருக்கிறார்கள்?

''பட்டப்பகல், மக்கள் நெரிசல் மிகுந்த கடைத்தெரு, கணவனோடு நடந்து போய்க் கொண்டிருந்த ஒரு பெண்ணின் கழுத்து நகையை மோட்டார் சைக்கிளில் வந்த இரு திருடர்கள் அறுத்துக் கொண்டு, தடுக்க முயன்ற இளைஞர் ஒருவரை அரிவாளால் வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றனர்.''

- இத்தகையச் செய்தியை நேர்மையான, சமூக அக்கறையுள்ள பத்திரிக்கைகள் எப்படி வெளியிட வேண்டும். சமூகத்தில் கிரிமினல் குற்றங்கள் பெருகிவிட்டதை, அரசு - காவல் துறையின் செயலற்ற - பொறுப்பற்ற தன்மையை எடுத்துரைக்கும் வகையில், சமூகப் பாதுகாப்பின்மையை உணர்த்தும் வகையில் வெளி



படிப்பகம்

www.padippakam.com

யிட வேண்டும்.

ஆனால் இதே செய்தியை, "இரண்டு இளைஞர்களின் வீரதீரச் செயல் இளம் பெண்ணின் நகையைப் பறித்துக் கொண்டு திறமையாகத் தப்பினர்!" என்று எந்தப் பத்திரிக்கையாவது வெளியிட முடியுமா?

ஆனால் இனி இப்படி எழுதுவது கூட பத்திரிக்கை தர்மத்துக்கு மாறானதோ, எதிரானதோ இல்லை என்று செய்தி ஊட கங்களின் உடமையாளர்களும் ஆசிரியர் களும் பகிரங்கமாகவே வாதிடும் நாள் வந்துவிட்டது.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா விவகாரத்தில் இப்படித்தான் செய்தி ஊட கங்கள் நடந்து கொள்ளுகின்றன.

ஆண்டிப்பட்டி இடைத்தேர்தல் முடி வுகள் அறிவிக்கப்பட்டவுடன் பத்திரிக் கையாளர்களைச் சந்தித்த ஜெயலலிதா சொன்னார், "இந்த வெற்றி ஒரு அரசியல் சரித்திரம். தமிழ்நாட்டில் மட்டுமில்லை; உலகிலேயே எந்த அரசியல் தலைவரும் சந்திக்காத இடையூறுகளை நான் சந்தித்தி ருக்கிறேன். என் கதை முடிந்து விட்ட தென்று சொன்னார்கள். அதையெல்லாம் வீழ்த்தி வந்திருக்கிறேன். எதிர்காலத்தில் வடும் சோதனைகளைச் சந்திக்கும் யாருக்கும் என் வெற்றி ஒரு பாடம்."

இது குறித்து, "வெற்றிக்குப் பின் பத்திரிக்கையாளர்களிடம் பேசிய அவ து குரலில் துணிச்சலும், உறுதியும் தென்பட்டது. எதிரிகளுக்கு ஒரு பரடம் இருந்தது" என்று இந்திய டுடே எழுதி யது.

"பீனிக்ஸ் பறவையைப் போல உயிர்த்தெழுந்தார் என்ற வாக்கியத்தைக் கேட்டுக் கேட்டு போரடித்துப் போயிருக் கலாம். ஆனால் இந்த பீனிக்ஸ் பறவை உதாரணம் வேறு எந்த அரசியல் தலைவ ரையும் விட ஜெயலலிதாவுக்குத்தான் பச்சிதமாகப் பொருந்தும்... தனக்கே உரிய பாணியில் எல்லாத் தடைகளையும் தகர்த்து மீண்டும் முதல்வர் பதவியில் அமர்ந்திருக்கிறார் ஜெ." என்று தொடர்ந்து எழுதியது இந்தியா டுடே.

இது ஒரு வகைமாதிரிதான். கருணா நிதியின் நேரடி ஆதரவு செய்தி ஊடகம் தவிர முதலாளித்துவ பத்திரிகைகள் - வானொளி அலைவரிசைகள் எல்லாமே குறைக்குறைய இதே பாணியில்தான் ஜெய லலிதாவின் வெற்றியைப் போற்றின.

"முதலில் சட்டரீதியான தடைகளைக் கடந்து, இப்போது மக்களின் அமோக ஆதரவுடன் இடைத்தேர்தலில் வெற்றி வாகை சூடி உறுதியுடனும் உற்சாகத்து டனும் மீண்டும் அரியணை ஏறியிருக் கிறார் ஜெயலலிதா, வாழ்த்தி வர வேற்போம்" என்று தொடங்குகிறது ஆ. விகடன்.

இதே, ஆண்டிப்பட்டி இடைத்தேர் தலில் வெற்றி பெறுவதற்காக ஜெயலலி தாவும் அவரது ஆட்சியினரும் என்னென்ன செய்தார்கள் என்பதை ஜூ.விகடன் எழுதியிருந்த செய்திகளின் தொகுப்பு:

"தொகுதியின் கிராமங்களுக்குள் ஊர்ந்து செல்லும் வாகன அணிவகுப்பு களை வாணவேடிக்கை பார்ப்பதுபோலப் பிரமிப்போடு பார்க்கிறார்கள் தொகுதி மக்கள். 'அம்மா நிக்கறாங்க... அள்ளிக் குடுப்பாங்க!' என்று ஆரம்பித்திலி ருந்தே கிளப்பி விடப்பட்ட பிரச்சாரத்தை நம்பி, போகிறவர்கள் வருகிறவர்களை




யெல்லாம் கரன்சி கனவுகளோடு பார்க்கி றார்கள் ஆண்டிப்பட்டிக்காரர்கள்."

"அ.தி.மு.க.வின் பண மழைக்கு முன்பாக தி.மு.க.வினர் சிங்கள் பீடியைக் குடித்தபடி தங்களுக்குத் தெரிந்த ராஜ தந்திரங்களையெல்லாம் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். என்றாலும் தொகுதிக்குள் அதிக அளவில் திரியும் புலனாய்வு போலீசார் இவர்களது தேர்தல் திட்டங்களை யெல்லாம் மோப்பம் பிடித்து அ.தி.மு.க. தரப்புக்கு போட்டுக் கொடுத்து விடு வதால், பல சமயங்களில் திணறிப் போகி றார்கள் தி.மு.க.வினர்" என்று எழுதியது ஜூ.விகடன்.

"தேர்தலுக்கு மூன்று மாதங்கள் முன்பாகவே அரசு இயந்திரம் முடுக்கி விடப்பட்டு விட்டது. 3 கோடி ரூபாய் செலவில் புதிய ஆற்றுப் பாலம் உட்பட பல பாலங்கள், சாலைகள், கழிப்ப றைகள், ஆழ்குழாய்கள், தண்ணீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டன. பல ஆயிரம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இல வச மிதிவண்டிகள் வழங்கப்பட்டன. கிராமக் கோவில்களுக்கு குடமுழுக்கு உட்பட பொதுப்பணம் என்று ஒரு தொகை தரப்பட்டு, கிராமம் முழுவதும் ஒட்டு மொத்தமாக ஜெயலலிதாவுக்கு ஓட்டுப் போட வேண்டும் என்று சத்தியம் வாங்கப்பட்டது."

"மாநிலம் முழுவதும் உள்ள கட்சி நிர்வாகிகள் தவிர எம்.எல்.ஏ., எம்.பி.க்கள், அமைச்சர்கள் அனைவ ருக்கும் பகுதி - கிராம வாரியான பொறுப் புகள் ஒப்படைக்கப்பட்டன. அரசு நிதி, எம்.எல்.ஏ. எம்.பி.க்களின் வளர்ச்சி நிதி ஆகியவற்றோடு பல கோடி ரூபாய் கட்சி நிதியும் செலவிடப்பட்டது. ஒவ்வொரு ஓட்டுக்கும் குறைந்தது ஆயிரம் ரூபாய் வரை நேரடி இலஞ்சமாகத் தரப்பட்டது. ஜெயலலிதா, தினகரன் பிரச்சாரத்தின் போது ஆரத்தி எடுப்பவர்கள், குழந்தை களுக்கு பெயர் சூட்டத் தருபவர்கள், காலில் விழுபவர்களுக்கெல்லாம், நூறு, ஐந்நூறு ரூபாய் நோட்டுக்கள் என்று வாரி இறைக்கப்பட்டது."

இவை ஜெயலலிதாவின் எதிர்த்த ரப்பு பிரச்சாரங்கள் அல்ல. ஜெயலலி தாவின் மறைமுக ஆதரவு செய்தி ஊட கங்கள் தரும் தகவல்கள்தாம்.

"ஆண்டிப்பட்டி தொகுதிக்குள் செல்வாக்குப் பெற்றிருக்கும் தி.மு.க. தலைகளின் வீடுகளுக்கு இரவு நேரத்தில் சென்று கதவைத் தட்டுகிறார்கள் தினக ரனின் ஆட்கள். தூக்கக் கலக்கத்திலிருந்து சம்பந்தப்பட்டவர்கள் மீள்வதற்குள்," இத்தனை நாள் அரசியலில் இருந்து என்னத்தைக் கண்டீங்க.... உங்க பேர்ல பேங்குல கணிசமான தொகை போட ஏற்பாடு பண்ணியாச்சு... வேற என்ன வேணும் கேளுங்க... யாருக்கு என்ன செய்யணும் சொல்லுங்க.... பண்ணி டுவோம்..." என்று தூண்டில் போடுகி றார்கள் தினகரனின் ஆட்கள். இப்படிச் செய்து கடந்த வாரத்தில் மட்டும் சுமார் முந்நூறு பேரை சத்தமில்லாமல் தங்கள் பக்கம் அ.தி.மு.க.வினர் இழுத்து விட்ட தாகத் தகவல்.

"தேர்தல் நெருக்கத்தில் இவர்கள் கட்சி மாறியது வெளிப்படையாக அறி விக்கப்படும்" என்றும் அ.தி.மு.க.வினர் அதிரடியாகச் சொல்லுகிறார்கள். கட்சி மாற மறுப்பவர்களை 'குறைந்தபட்சம் வைகை சேகருக்கு ஆதரவாக வேலை பார்க்காமல் நீங்கள் ஒதுங்கியிருந்தால் கூட போதும்' என்று பச்சை நோட்டுக்


படிப்பகம்

www.padippakam.com

களைக் காட்டி 'தாஜா' பண்ணுகிறார்களாம் தினகரனின் தூதுவர்கள்'' என்கிறது ஜூ.வி.

இந்தச் செய்திகளை வைத்துப் பார்க்கும் போது என்ன தோன்றுகிறது. சமூகம் முழுவதும் நஞ்சாக மாற்றும் நோய்க் கிருமிகளாக அ.தி.மு.க.வினர் செயல்பட்டதுதான் ஆண்டிப்பட்டித் தேர்தலில் ஜெயாவின் வெற்றிக்கான காரணம்.

ஆனால், ''ஆண்டிப்பட்டி வாக்காளர்களின் மனதைக் கவர ஜெயலலிதா பெரிதாக எதுவும் செய்ய வேண்டியிருக்கவில்லை. எம்.ஜி.ஆரின் வாரிசு நான் என்ற முழக்கம், சில வாக்குறுதிகள் போதுமாயிருந்தது.''

''ஜெயலலிதா பெற்ற சுலபமான வெற்றிக்கு எம்.ஜி.ஆரின் பெயர் மட்டும் காரணமல்ல, 2001 தேர்தலில் அவரது வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதிலிருந்து ஆண்டிப்பட்டி பிரச்சாரம்வரை அவர் திட்டம் போட்டு வியூகம் வகுத்து காய்களை நகர்த்தியதன் விளைவுதான் இந்த வெற்றி. அடுத்தடுத்து சோதனைகள் வந்தாலும் அதைத் துணிச்சலாக வெல்லும் அவரது திறமைதான் அவருக்குக் கைகொடுத்தது.

''வெற்றி பெற்றாக வேண்டும் என்பதற்காக பல முறைகேடுகளில் அ.தி.மு.க. ஈடுபட்டிருக்கிறது' என்று அவர் (கருணாநிதி) குற்றஞ்சாட்டியது களமிறங்கி போரிடுவதைவிட போரையே தவிர்க்கப் பார்ப்பது போலிருந்தது'' என்று இந்தியா டுடே எழுதுகிறது.

பல கோடி ரூபாய் பணத்தை வாரி இறைத்து, அரசு இயந்திரத்தை முழுமையாக முறைகேடாகப் பயன்படுத்தி இறுதியில் போலீசையும், ரௌடிகளையும் வைத்து எதிர்க்கட்சியினரை அடக்கி ஒடுக்கி, அப்போதும் கூட தான் எதிர்பார்த்து அறிவித்தபடியான வாக்குகளை பெற முடியாமற் போன ஜெயலலிதாவின் வெற்றியை முதலாளியச் செய்தி ஊடகங்கள் வானளாவப் புகழ்கின்றன.

''செய்யாத குற்றங்களுக்காக நெருப்பாற்றில் நீந்தி வந்தேன். எந்த அரசியல் தலைவரும் சந்தித்திராத சோதனைகளையும் போராட்டங்களையும் நான் சந்தித்த பின் மீண்டும் இந்தச் சட்டமன்றத்தில் முதல்வராக நின்று கொண்டிருக்கிறேன். இந்த வேளையில் வஞ்சகர்களின் சூழ்ச்சிகள், பழிகாரர்கள் வெட்டிய படுகுழிகள், கொச்சை மனிதர்கள் கூறிய அவதூறுகள், வீணர்கள் ஏற்படுத்திய அவமானங்கள், சகுனிகளின் ஜோடிக்கப்பட்ட வழக்குகள் ஆகியவை என் மனக்கண்ணில் நிழலாடுகின்றன'' என்று ஜெயலலிதா பதவியேற்ற பிறகு கூடிய சட்டப்பேரவையில் வஞ்சிக்கப்பட்ட அபலைக் கதாநாயகியைப் போல யாரோ எழுதிக் கொடுத்த வசனத்தைப் படித்தார்.

இதே கருத்தை செய்தி ஊடகங்கள் வேறு வார்த்தைகளில் வாந்தியெடுத்தன. ஏற்கனவே, ஜெயலலிதா மீதான இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள் பற்றிய வழக்குகளை, தமிழ்நாட்டு பழிவாங்கும் திராவிட அரசியலின் வெளிப்பாடாகத்தான் ஆங்கிலச் செய்தி ஊடகங்கள் சித்தரித்து வருகின்றன.

அடுக்கடுக்கான பல வழக்குகள் போடப்பட்டும், சிறையிலடைக்கப்பட்டும் ஒரு பெண்ணாகிய ஜெயலலிதா தன்னந்தனியாக நின்று போராடினார். அரசியலை விட்டு ஓடிவிடாமல் துணிச்சலுடன் எதிர்கொண்டார். உறுதி குலையாது, தன்னம்பிக்கை தளராது, திறமையாகச் சமாளித்து, அரசியல் அறிவுக்கூர்மையுடன் செயல்பட்டார். தடைகளைத் தகர்த்து ஈடு இணையற்ற தலைவி என்று நிரூபித்தார். இப்போது அரசியல் பக்குவமும் அனுபவமும் மிக்கவராக வளர்ந்துள்ளார் என்று செய்தி ஊடகங்கள் சித்தரிக்கின்றன.

**பெண்ணின் நகையைப் பறித்துத் திறமையாகத் தப்பினர் - இளைஞர்களின் வீரச் செயல்'' என்று எழுதுவது கூட பத்திரிகை தர்மத்துக்கு மாறானதல்ல என வாதிடும் காலம் வந்துவிட்டது.**

ஆனால், நடந்தது என்ன? அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட ஒரு கும்பலைச் சேர்ந்துக் கொண்டு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கோடிகோடியாக கள்ளப் பணத்தைக் குவித்தார். சொத்துக்களையும் நகை நட்டுக்களையும் அடுக்கினார். பத்திரிக்கையாளர், வழக்கறிஞர், அரசியல் எதிரிகளைத் தாக்கி ஒடுக்கினார். உல்லாச - ஊதாரி வாழ்க்கை வாழ்ந்தார். இதற்கெல்லாம் அரசு பதவிகளைக் கேடாகப் பயன்படுத்திக் கொண்டார்.

தேர்தல்களில் தோற்றுப் பதவியிழந்தார். வழக்குமன்றங்களில் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டார். இந்த வழக்குகளைக்கூட அரசியல் உருட்டல் மிரட்டல், சட்டநீதித் துறைகளை விலைக்கு வாங்குவது போன்ற முறைகேடுகள் மூலம் எதிர்கொண்டு தப்பித்தார்.

இப்படிப்பட்ட செயல்களைத் துணிச்சல், உறுதி, தன்னம்பிக்கை, திறமை, அரசியல் பக்குவம் என்று கருத முடியுமா? அப்படித்தான் செய்தி ஊடகங்கள் கருதுகின்றன. இவர்களின் அகராதிப்படி அடாவடி, அராஜகம், ஆணவம் போன்றவை துணிச்சல், தன்னம்பிக்கை ஆகிவிட்டன. அதிகார முறைகேடு, சந்தர்ப்பவாத அரசியல் போன்றவை நிர்வாக, அரசியல் திறமையாகி விட்டன. ஜனநாயக விரோத, சர்வாதிகாரச் செயல்கள் அரசியல் உறுதியைக் குறிக்கின்றன.

சரவணபவன் ஓட்டல் முதலாளி ராஜகோபாலின் பாலியல் கொலைக் குற்ற விவகாரத்தையும், கணிணி இணையத்தள ஆபாசப்பட வியாபாரி டாக்டர் பிரகாசின் விவகாரத்தையும் வைத்து தமிழ்ப் பத்திரிக்கையாளர்கள் வியாபாரம் நடத்துவதை விமர்சித்த ''இந்தியா டுடே'' - தமிழ்ப் பதிப்பின் ஒரு பெட்டிச் செய்தி பின்வருமாறு தொடங்குகிறது:

''சமூகத்திற்கும் அதைச் சுற்றி நடக்கிற நிகழ்வுகளுக்கும் இடையே உள்ள பாலம்தான் மீடியா (செய்தி ஊடகம்). குற்றங்கள், ஊழல்கள், முறைகேடுகளை மீடியா (செய்தி ஊடகம்) வெளியே கொண்டு வரும்போதுதான் சமூகம் விழிப்புணர்வு அடைகிறது.''

ஆனால், ஜெயலலிதாவும் அவரைச் சேர்ந்தவர்களும் செய்யும் குற்றங்கள், ஊழல்கள் முறைகேடுகளை மூடி மறைக்கின்றன செய்தி ஊடகங்கள், இதன் நோக்கம், சமூகம் விழிப்புணர்வு அடையக் கூடாது என்பதுதானே!

சமூகத்தின் அரசியல், பண்பாட்டுத் தரம் சீர்ழிந்து தாழ்ந்து கொண்டே போகிறது. குறிப்பாக நாட்டின் அரசியல் அமைப்பு மீது மக்கள் நம்பிக்கை இழந்து வருகின்றனர். புறையோடி அழுகி நாறும் புண்ணைக் குணப்படுத்தவே முடியாது என்கிற நிலை ஏற்படும் போது அதற்கே புனுகு - வாசனைத் திரவியங்கள் பூசி மணக்கச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை. இதைத்தான் ஆலை இல்லாத ஊரில் இலுப்பைப்பூ சர்க்கரை என்பார்கள்!

● க. மு.



படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

அரங்கில் ஒலிக்கச் செய்த லத்தீன் அமெரிக்க ஆடு மேய்ப்போரின் குழலிசை அன்றும் அதன் பிறகும் நம் செவிக்குள் சுழன்றவண்ணமிருந்தது.

'நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் கலைஞர்களின் அவலநிலை' என்ற தலைப்பில் பேச வந்த முனைவர். மு. இராமசாமி நாட்டுப்புறக் கலை - செவ்வியல் கலை என்ற சொற்றொடர்களையே கேள்விக்குள்ளாக்கினார். வருண தரும முறையைத்தான் தமிழ் மரபும் பின்பற்றியிருக்கிறது என்பதையும் கலையில் நவரசங்கள் என்றழைக்கப் படும் ஒன்பாண் சுவைகளில் கூட பார்ப்பன, சத்திரிய, வைசிய, சூத்திர பஞ்சம வகுப்பாருக்கேற்ற பிரிவினை செய்யப்பட்டிருப்பதையும் ஆதாரங்களுடன் விளக்கினார். எனவே இவற்றை 'தன்னைத் தானே உயர்த்திக் கொண்ட கலை - ஒடுக்கப்பட்ட கலை' என்றழைப்பதே பொருத்தம் என்று கூறி ஒடுக்கப்பட்ட கலைஞர்கள் அரசு நிறுவனங்களால் இழிவாக நடத்தப்படுவதற்குத் தனது சொந்த அனுபவங்களிலிருந்து சான்றுகளையும் கூறி, இதனை எதிர்த்துப் போராடக் கோரி முடித்தார்.

'வடபுலத்தில் வழங்கப்பட்டு வரும் இந்துஸ்தானி இசை என்பது தனி மரபு இசையல்ல' என்பதை விளக்கிப் பேசினார் திரு. நா. மம்மது. தமிழிசை மரபுடன் மொகலாயர் ஆட்சிக்காலத்தில் பாரசீக இசைமரபும் கலந்து உருவானது தான் இந்துஸ்தானி இசை என்பதை சொல்லியல் ஆதாரங்கள், கருவிகளின் வரலாறு ஆகிய விவரங்களுடனும், என்னென்ன பண்கள் என்னென்ன இந்துஸ்தானி ராகங்களாக உருப்பெற்றுள்ளன என்பதையும் விளக்கிப் பேசினார். உடன் பங்கேற்ற இசைக்கலைஞர் ஷாகுல் ஹமீது உரையில் குறிப்பிடப்பட்ட இராகங்களைப் பாடிக் காட்டினார்.

கருத்தரங்க நிகழ்ச்சியின் முடிவில் தில்லைக் கோயிலின் சிற்றம்பல மேடையில் நின்று திருவாசகம் பாடியதற்காகத் தில்லை வாழ் அந்தணக் காலிகளால் தாக்கப்பட்ட பெரியவர் ஆறுமுகசாமி தன்னுடைய அனுபவத்தையும் போராட்டத்தையும் விளக்கினார். பார்ப்பனியத்தின் சாதி, இன, மொழி ஒடுக்குமுறைகளுக்கு இன்னொரு சான்றை வழங்கியது அவரது உரை.

மாலை 7 மணிக்குத் தொடங்கி இரவு 2.30 மணிவரை தொடர்ந்தன கலை நிகழ்ச்சிகள். சாதிவெறிக்கெதிரான 'திருப்பிக் கொடு' என்ற நாடகத்தில் மன நிலை பிறழ்ந்தவராக நடித்த கம்பம் தோழர் கிருஷ்ணாவின் நடிப்பு, செவ்விசையின் தாளங்களை அநாயாசமாகத் தமது பறையில் வாசித்துக் காட்டிய மருடாட்டக் கலைஞர்களின் கலைத்திறன் ஆகியவை காண்போரை வியக்கச் செய்தன.

புராணக் கதைகளை மட்டுமே நிகழ்த்தி வந்த கணியான் கூத்துக் கலைஞர்கள் தமது சொந்த முயற்சியில் தயாரித்த 'அணு தின்ற தென்னாடு' என்ற கூடங்குளம் அணு மின் நிலையத்துக்கு எதிரான கலைநிகழ்ச்சி நம்பிக்கையூட்டியது.

பாலியல் விரசம், ஆணாதிக்கச் சேட்டைகள் ஆகியவற்றுக்காகவே 'ஒதுக்கப்பட்ட' குறவன் குறத்தி ஆட்டம் புதிய உள்ளடக்கத்துடன் அரங்கேறியது. 'நாகரிக' சமுதாயத்தின் அரசியல் பண்பாடு இரட்டை வேடங்களை நகைச்சுவை ததும்பத் தோலுரித்த இந்நிகழ்ச்சி சில பழைய வடிவங்களுக்குள் புதிய உள்ளடக்கம் ஏறும்போது தோன்றும் வீச்சுக்கு ஒரு எடுத்துக்காட்டாய் அமைந்தது.

'பரந்து கெடுக உலகியற்றியான்' என இறைவனைச் சாடும் வள்ளுவனின் அறச் சீற்றம், பாணர்களின் அவலம், தனிப் பாடல் கவிஞர்களின் வறுமைக்கெதிரான ஆவேசம், மணிமேகலையின் அட்சய பாத்திரம் - எனத் தமிழிலக்கியங்கள் பல்வேறு வடிவங்களில் பதிவு செய்யும் பஞ்சப்பாட்டுக்களையும் தாது வருசத்துப் பஞ்சப்பாட்டையும், இன்று உலகவங்கியின் உத்திரவுக்கு இணங்க வாஜ்பாயி உருவாக்கும் பஞ்சத்தையும் அதற்கு எதிரான புரட்சிப் பாட்டையும் இணைத்து வர்க்கப் போராட்டத்தின் வரலாற்றை ஒரு கோட்டுச் சித்திரமாக வழங்கியது ம.க.இ.க.வின் நிகழ்ச்சி.

இசைவிழாவில் புதிய கலாச்சார வெளியீடுகளாக வந்த மூன்று நூல்களும் சுமார் 250 தொகுதிகள் அங்கேயே விற்பனையாயின. ஆயிரத்திற்கும் மேல் விற்பனையான ஒலிப்பேழைகள், அனைத்து நிகழ்ச்சிகளும் முடியும் வரை கலையாமல் ஆர்வத்துடன் அமர்ந்திருந்த மக்கள் திரள் அனைத்தும் சோர்ந்த உள்ளங்களுக்கு நம்பிக்கையூட்டின என்றால் மிகையாகாது.


"புதிய கலாச்சாரம்" உரிமையாளர்
மற்றும் இதர விவரங்கள் படிவம் IV (விதி 8-இன் படி)

| | | |
|---|---|---|
| 1. வெளியிடும் இடம் | : | எண். 3, 4-வது தெரு, செகந்நாதபுரம், சேத்துப்பட்டு, சென்னை-31 |
| 2. வெளியிடும் காலம் | : | மாதம் ஒருமுறை |
| 3. அச்சிடுபவர் பெயர் | : | இரா. சண்முகராசு |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | எழில் பிரிண்ட்ஸ், 110, 2-ஆம் தளம், 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024. |
| 4. வெளியிடுபவர் பெயர் | : | வி. வல்லபேசன் |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | எண். 3, 4-வது தெரு, செகந்நாதபுரம், சேத்துப்பட்டு, சென்னை-31 |
| 5. ஆசிரியர் பெயர் | : | வி. வல்லபேசன் |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | எண். 3, 4-வது தெரு, செகந்நாதபுரம், சேத்துப்பட்டு, சென்னை-31 |

வி. வல்லபேசனாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

1.4.2002.

(ஒ-ம்) வி. வல்லபேசன்.
வெளியிடுபவர்.


## அறிவிப்பு

**அன்பார்ந்த வாசகர்களே,**

**தவிர்க்கவியலாத காரணங்களினால் சென்ற மார்ச் மாத இதழ் வெளிவரவில்லை. மன்னிக்கவும்.**

**சந்தாதாரர்கள் கவனத்திற்கு:**

**இந்த இதழ் முதல் உங்களுக்கு புதிய சந்தா எண்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. தபால் உறையில் உங்கள் முகவரிக்கு மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் அந்த எண்ணை குறித்து வைத்துக் கொள்ளவும். ஒவ்வொரு இதழிலும் முடிவடையும் சந்தாதாரர்களின் எண்கள் வெளியிடப்படும். அதைப் பார்த்து சந்தாவை புதுப்பிக்குமாறு வேண்டுகிறோம்.**

**1. இந்த இதழோடு முடிவடையும் சந்தா எண்கள்:**

**4,7,28,135,173,174,175,176, 177,178,179,180,181,183, 195,368,421,424**

**2. அடுத்த இதழில் முடியும் சந்தா எண்கள்:**


**29,30,136,137,150,184,185, 186,187,188,190,196,197, 199,200,245,293,369,371**

**மேற்கண்ட எண்களுக்குரிய சந்தாதாரர்கள் ரூ. 60 செலுத்தி சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.

படிப்பகம்

PUTHIYA KALACHARAM (TAMIL MONTHLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87
Regd. No: TN/Chief PMG - 303/2002
www.padippakam.com




முசுலீம்கள் என்றால்—
பாக் கிரிக்கெட் அணிக்கு
கைதட்டுபவர்கள்,
ஐ.எஸ்.ஐ. சதிக்கு உதவுபவர்கள்,
வங்கதேசத்திலிருந்து ஊடுருவியவர்கள்,
வந்தேமாதரத்தைப் பாடமறுப்பவர்கள்,
பாபரை போற்றுபவர்கள்
இன்னும் தாடிவைத்து,
அரபு - உருது பேசி, லுங்கி கட்டி
தனிக்குடியிருப்பில் வாழ்பவர்கள்,
தேசத்துரோகிகள், பயங்கரவாதிகள்—

போன்ற ஆர்.எஸ்.எஸ்.-இன்
அவதூறுகள் காவிப்புழுதியாய்க்
கிளம்பி பெரும்பான்மை மக்களின்
கண்களை மறைக்கின்றன!

ஏன்?

விலை ரூ - 50




ஒவ்வொரு காலகட்டத்தின்
இசைப்படைப்பும் அந்த சமூகத்தின்
நாடித்துடிப்பையும் படைப்பாளிகளி
ஆளுமையையும் ஏறத்தாழ
உணர்த்துகிறது.

தரம் தாழ்ந்த நகைச்சுவை
உங்களைச் சிரிக்க வைத்தால்...
களிவெறி நடனமும் இசையும்
உங்களை மயங்க வைத்தால்....

உங்களுடைய ரசனையிலிருந்து
அந்த ரசனை உங்களிடம்
தோற்றுவிக்கும் உணர்ச்சிகளிலிருந்து

உங்களுக்குள்ளேயே வேறொரு
ஆளுமை உருவாகிறது
என்று பொருள்

விலை ரூ - 4

மதத்தின் அடிப்படையிலான
வெவ்வேறு தனிநபர் சட்டங்கள்
தேசத்தின் ஒற்றுமையைக் குலைத்து
விடும் என்று கேள்வி எழுப்புகிறது
பாரதிய ஜனதா.

அவர்களுக்கு இறைவன்
வகுத்தளித்த சட்டங்களை
மாற்றுவதற்கு எந்த மனிதர்க்கும்
உரிமையில்லை
என்கிறார்கள் இசுலாமிய
மதவாதிகள்.

பொதுசிவில் சட்டமொன்றைக்
கொண்டு வருவதற்கேற்ற மத
நல்லிணக்க சூழ்நிலை இன்னும்
உருவாகவில்லை என்கிறார்கள்
பொதுவான ஜனநாயகவாதிகள்.

மதச்சார்பின்மை, பொதுசிவில்
சட்டம் குறித்த பிரச்சினைகளுக்கு
நமது விடை என்ன?

விலை ரூ - 20







விலை ரூ - 35

## பார்ப்பன இந்துமதவெறிக்கு எதிரான பாடல் ஒலிப்பேழைகள்

தொடர்பு முகவரி:
இரா. சீனிவாசன்
புதியகலாச்சாரம்
18, முல்லைநகர் வணிகவளாகம்,
2வது நிழற்சாலை, அசோக் நகர்,
சென்னை - 600 083.
தொலைபேசி : 044 - 3718706
puthiyakalacharam@hotmail.com




விலை ரூ - 35